வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 25.03.2024 திங்கட்கிழமை இதழ் : 85 பக்கங்கள் : 12

## இலங்கை - இந்தியா இடையே பாலம்: பேச்சுக்காக டில்லி செல்கிறார் சாகல!

கொழும்பு, மார்ச் 25

இலங்கை - இந்தியா இடையே பாலம் அமைக்கும் திட்டம் தொடர்பாக இந்த வாரம் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. இதற்காக ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க நாளை மறுதினம் புதுடில்லி செல்கிறார்.

அங்கு, இரு நாட்கள் டெல்லியில் தங்கியிருக்கும் சாகல ரத்நாயக்க இந்தியாவின் முக்கிய தலைவர்களுடன் பாலம் தொடர்பில் பேச்சு நடத்துவார் என்று கூறப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய இந்திய பயணத்தில் இரு நாடுகளுக்கும் இடையில் பாலம் அமைப்பது குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சுகளில் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் தலை 11

## ஜனாதிபதி வேட்பாளருக்கு ரணிலே பொருத்தமானவர்!

### பஸில் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 25

”ஜனாதிபதி வேட்பாளருக்கு தகுதியானவர் ரணில் விக்கிரமசிங்கதான். பொருளாதார ரீதியில் வீழ்ச்சிப் பாதையில் சென்ற இந்த நாட்டை அவர் மீட்டெடுத்திருக்கிறார். அனைத்துப் பிரச்னைகளும் மெல்ல தீர்ந்து கொண்டு வருகின்றன என்று தான் கருதவில்லை என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன், கோட்டாபய ராஜபக்ஷவை 11

### ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்:

## மைத்திரியிடம் இன்று சி. ஐ. டி. விசாரணை!



கொழும்பு, மார்ச் 25

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைக்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இன்று திங்கட்கிழமை குற்றப்புலனாய்வு பிரிவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்தியவர்கள் யார் என்பது தனக்கு தெரியும் என்று கடந்த வெள்ளிக் கிழமை - ஈஸ்டர் தாக்குதல் நடந்த போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இது தொடர்பில் அவரிடம் விசாரணை நடத்த வேண்டும் என்று 11



## பிள்ளையார் ஆலய வளாகத்தில் அடாத்தாக பௌத்த கட்டுமானம்!

### திருமலையில் மத முறுகல் நிலை

திருமலை, மார்ச் 25

திருகோணமலை மடத்தடி வீரகத்தி விநாயகர் ஆலயம் முன்பாக உள்ள - ஆலயத்துக்கு சொந்தமான வளாகத்தில் பௌத்த கட்டுமான நடவடிக்கைகளில் பெரும்பான்மை இனத்தவர்கள் சிலர் அடாத்தாக ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் அவர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என்று அறியவருகின்றது.

முன்னதாக கடந்த 2019ஆம் ஆண்டு அந்தப் பகுதியில் அடாத்தாக புத்தர் சிலை வைக்கப்பட்டது. இந்த நிலையிலேயே தற்போது பௌத்த கட்டுமானம் நடைபெற்று வருகின்றது.

இதேநேரம், அந்தக் காணியின் ஆவணங்களை தங்களிடம் தருமாறும் அவர்கள் ஆலய நிர்வாகத்தினரை மிரட்டி வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

(ஐ)

## தெரிந்த உண்மையை மைத்திரி உடன் வெளிப்படுத்த வேண்டும்!

### எதிர்க்கட்சி தலைவர் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 25

முன்னாள் ஜனாதிபதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான உண்மைகள் தெரிந்தால் தயவு செய்து அதனை உடனே வெளிப்படுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

அம்பாந்தோட்டை பாடசாலை ஒன்றுக்கு ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 11

## மைத்திரிபால சிறிசேன விரைவில் சிறை செல்வார்!

### உதய கம்மன்பில சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 25

பயங்கரவாதம், அரசுக்கு எதிரான செயல்பாடுகள் தொடர்பில் தகவல் தெரிந்தும் அதை மறைப்பது 10 வருடகால சிறைத் தண்டனைக்குரிய குற்றமாகும். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெகு விரைவில் வெலிக்கடை சிறைச்சாலைக்கு செல்வார் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான 11

## 10 ஆண்டுகளில் மீண்டும் பொருளாதார நெருக்கடி!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, மார்ச் 25

இறக்குமதியை தொடர்ந்து நம்பியிருப்பதும் - கடன்களை வாங்குவதும் தொடர்ந்தால் 10 ஆண்டுகளில் மீண்டும் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்படும் என்று - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசாங்கம் மேற்கொண்டு வரும் புதிய 11

## தேர்தல் பிற்போடப்படும் என்பது எதிரணியின் கற்பனை பிரசாரம்

### நீதி அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 25

பாராளுமன்றத் தேர்தல் முறைமையில் மாற்றங்களை ஏற்படுத்த 2 முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றால், தேர்தல்கள் பிற்போடப்படும் என்று எதிரணி கற்பனையில் பிரசாரம் செய்கிறது - என்று கூறியுள்ளார் நீதி மற்றும் சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ.

நாட்டில் பாராளுமன்ற தேர்தல் முறைமையில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்பது நீண்டகால கரிசனையாகும். அனைத்து இனக் குழுமங்களினதும் பிரதிநிதித்துவங்களை உறுதி செய்யும் வகையிலான 11

## 1987-1989 ஜே. வி. பி. கிளர்ச்சிக்கு மன்னிப்பு கோரினார் அநுரகுமார!

ரொறன்ரோ, மார்ச் 25

1987 தொடக்கம் 1989 வரையான காலப்பகுதியில் நாட்டில் இடம்பெற்ற ஜே. வி. பி. கிளர்ச்சிக்காக மன்னிப்பு கோரினார் ஜே. வி. பியின் தலைவரும் இன்றைய தேசிய மக்கள் சக்தியின் தலைவருமான அநுரகுமார திஸநாயக்க.

கனடா சென்றுள்ள அநுரகுமார ரொறன்ரோவில் நடந்த கூட்டத்திலேயே மன்னிப்பைக் கோரினார்.

இதன்போது, வன்முறைக்கு வழிவகுத்த சூழ்நிலை காணப்பட்டதாகவும் எது எப்படி இருந்தாலும் ஜே. வி. பி. கடந்த கால செயல்களிலிருந்து விலகி தற்போது அரசியல் கட்சியாக முன்னேற்றம் அடைந்துள்ளது என்றும் அவர் கூறினார். 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களம் இறக்குவது தொடர்பாகப் பல தரப்புகளும் அண்மைக் காலமாகப் பேசத் தொடங்கியிருக்கின்றனர்.

சில நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்ற கருத்தாடல் ஒன்றில் அந்த விவகாரம் குறித்து விரிவாகப் பேசப்பட்டிருந்தது. “மக்கள் மனு” வடக்கு - கிழக்கு சிவில் சமூக குழுவினர் ஏற்பாடு செய்திருந்த அந்தக் கருத்தரங்கில் வளவாளர்களாக கலந்துகொண்ட அரசியல் ஆய்வாளர்கள், கருத்துருவாக்கிகள் மூவரும் பொது வேட்பாளர் போட்டியிட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தனர்.

இந்தக் கருத்தரங்கு பற்றி மூத்த ஊடகவியலாளரும் அரசியல் விமர்சகருமான வீரகத்தி தனபாலசிங்கம் எழுதிய கட்டுரை ஒன்றில் ஒரு முக்கியமான கேள்வி ஒன்றை எழுப்பியிருந்தார்.

அதனை அப்படியே தந்துவிட்டு இன்று சொல்ல வந்த விடயத்துக்கு வருகிறேன்.

“ஜனாதிபதித் தேர்தலை சர்வஜன வாக்கெடுப்பாகக் கருதி தமிழ் மக்கள் தங்களது தற்போதைய நிலைப்பாட்டை வெளிப்படுத்தக்கூடியதாக அவர்களை எந்தளவுக்கு தமிழ்க் கட்சிகளால் வழிநடத்த முடியும் என்பது அவற்றின் ஒருமித்த அணுகுமுறையிலேயே தங்கியிருக்கிறது. அத்துடன், அவ்வாறு தமிழ் மக்கள் வெளிப்படுத்தக்கூடிய நிலைப்பாட்டைத் தொடர்ந்து அடுத்த கட்டமாக எத்தகைய அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவேண்டும் என்பதிலும் தமிழ்க் கட்சிகள் மத்தியில் முன்கூட்டிய தெளிவு இருக்கவேண்டும். அல்லாவிட்டால் இந்த முயற்சி ஓர் அரசியல் கேலிக்கூத்தாகவே முடியும். தமிழ் மக்களின் வாக்குகளும் பெறுமதியற்றவையாகிப் போகும் என்பதுடன் அவர்களது நீண்டகால - நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளும் கொச்சைப்படுத்தப்படுவதாகவே முடியும்.”

இதுவே, தனபாலசிங்கம் தெரிவித்த கருத்துகளில் முக்கியமானது.

தமிழ் பொதுவேட்பாளர் என்பது போட்டியிடும் வேட்பாளர்களுடன் பேரம் பேசலுக்கானதல்ல. அது தமிழ் மக்கள் தமது தற்போதைய நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கானது.

இதுகாலம்வரை சிங்கள அரசியல் கட்சிகளுடன் எமது தலைவர்கள் என்று சொல்பவர்கள் பேரம்பேசி தமிழ் மக்கள் எதனையும் கண்டதில்லை. சிலவேளைகளில் பேரம்பேசிய தலைவர்கள் பயனடைந்தார்களா என்பது தெரியவில்லை. பொதுவேட்பாளர் என்பது முதலில் கட்சிகள் அதாவது தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஓரணியில் வந்து வேட்பாளரை நிறுத்தவேண்டும். இரண்டாவது அதனை பேரம்பேசலுக்கான கருவியாகப் பயன்படுத்தி வேட்பாளர்களுடன் பேரம்பேசக் கூடாது என்பதே அன்றைய கருத்தரங்கில் ஒலித்த முக்கிய விடயமாக இருந்தது.

ஆனால், எப்போதும் போல இந்த விடயத்தில் முந்திக்கொண்டு, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் என்ற அந்தஸ்தில் சுரேஷ் பிறேமச்சந்திரன் அதுகுறித்து அறிவிப்பு ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படும்போது அவருடைய நோக்கம் உட்பட தென்னிலங்கை தலைமைகளுடன் பேரம்பேசுவதற்கான நிபந்தனை வரைவு ஒன்று தயாரிக்கப்படவுள்ளதாக சுரேஷ் பிறேமச்சந்திரன் அறிவித்திருக்கிறார்.

அந்த அறிவிப்பு, எதைச் சொல்கிறது என்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

“தமிழ் மக்கள் அனைவரும் ஏகோபித்து தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிக்கும்போது தென்னிலங்கைத் தலைவர்கள் பெரும்பான்மையை உறுதி செய்வது மிகக் கடினமாக இருக்கும். ஆகவே, அவர்கள் தமிழ் மக்களை நோக்கி வரவேண்டிய தேவை ஏற்படும். அப்போது தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை உள்ளடக்கிய நிபந்தனைகளை தமிழ் பொதுவேட்பாளர் கொண்டிருப்பார். இதனடிப்படையில் அதனை மையப்படுத்தி பேச்சுகளை முன்னெடுக்க முன்வரும் வேட்பாளருடன் பேச்சு நடத்துவதற்கு தயாராகவே உள்ளோம்“ என்கிறார் அவர்.

முதலில் இத்தகைய அறிவிப்பை வெளியிட அவரது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி அனுமதி வழங்கியதா என்பதையும் அந்தக் கூட்டணியில் உள்ள கட்சிகள் முதலில் அறிவிக்கவேண்டும். “வெண்ணெய் திரண்டு வரும்போது தாளியை உடைக்கின்ற“ வேலையை செய்வது எந்த வகையிலும் தமிழ் மக்களுக்கு உதவப் போவதில்லை.

**- ஊர்க்குருவி.**

# ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் பேரம்பேச வரைவு தயாரிக்கப்படவுள்ளது!

## சுரேஷ் பிறேமசந்திரன் தெரிவிப்பு

*யாழ்ப்பாணம், மார்ச் 25*

ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படும்போது அவருடைய நோக்கம் உட்பட தென்னிலங்கை தலைமைகளுடன் பேரம்பேசுவதற்கான நிபந்தனை வரைவு ஒன்று தயாரிக்கப்படவுள்ளதாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப்பேச்சாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க ஆகியோர் களமிறங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆகவே, சிறுபான்மை மக்களின் வாக்குகள் வெற்றியை தீர்மானிப்பதில் பெரும் செல்வாக்கைச் செலுத்தவுள் ளன. எனவேதான் தென்னிலங்கை தலைவர்களுக்கு தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையை வெளிப்படுத்தும் முகமாக அவர்களின் வெற்றியை தீர்மானிக்கும் வாக்குகள் அவர்களுக்கு செல்வதை தடுக்கும் முகமாகவே தமிழர்களின் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு முயற்சிகளை எடுத்துள்ளோம்.

தமிழ் மக்கள் அனைவரும் ஏகோபித்து தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிக்கும்போது தென்னிலங்கைத் தலைவர்கள் பெரும்பான்மையை உறுதி செய்வது மிகக் கடினமாக இருக்கும். ஆகவே, அவர்கள் தமிழ் மக்களை நோக்கி வரவேண்டிய தேவை ஏற்படும்.

அப்போது தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை உள்ளடக்கிய நிபந்தனைகளை தமிழ் பொதுவேட்பாளர் கொண்டிருப்பார். இதனடிப்படையில் அதனை மையப்படுத்தி பேச்சுகளை முன்வரும் வேட்பாளருடன் நடத்துவதற்கு தயாராகவே உள்ளோம். இது தொடர்பான நிபந்தனை வரைவு ஒன்று தயாரிக்கப்படவுள்ளது - என்றார். (ஐ)

# 1000 மீற்றர் தூரம் பட்டா வாகனத்தை தலைமுடி, தாடியால் இழுத்து சாதனை!

*கொழும்பு, மார்ச் 25*

தனது தாடியாலும் தலைமுடியினாலும் ஏஷ் பட்டா ரக வாகனத்தை 1000 மீற்றர் தூரம் வரை இழுத்து உலக சாதனை நிகழ்த்தியுள்ளார் யாழ்ப்பாணத்தவரான செ. திருச்செல்வம்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் கொழும்பு காலிமுகத்திடலில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

1000 மீற்றர் தூரத்துக்கு வாகனத்தை தனது தாடியாலும் முடியாலும் இழுத்து உலக சாதனையை நிகழ்த்துவதே திருச்செல்வத்தின் நோக்கமாக அமைந்தது.

அதற்கமைய 1550 கிலோ கிராம் எடை கொண்ட பட்டா ரக வாகனத்தை 500 மீற்றர் தூரத்துக்கு தாடியாலும், 500 மீற்றர் தூரம் வரை தலை முடியாலும் இழுத்து திருச்செல்வம் சாதனை படைத்துள்ளார்.



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் உலக சாதனை புத்தக நிறுவனப் பிரதிநிதிகள் இந்த சாதனை நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இதன்போது வாகனத்தை இழுத்துவந்த செல்லையா திருச்செல்வத்தை ஆரம்பம் முதல் சாதனையை நிலைநாட்டும் வரையில் அமைச்சர் உற்சாகப்படுத்தினார்.

இந்த நிகழ்வை, சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் பிரதிநிதிகள் நேரடியாக அவதானித்து திருச்செல்வத்தின் சாதனையை அங்கீகரித்து பதக்கத்தையும் விருதையும் பட்டயத்தையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மூலம் வழங்கினர்.

செல்லையா திருச்செல்வம் (60) கடந்த பத்தாண்டுகளாக தனது தலைமுடியாலும், தாடியாலும் வாகனங்களை இழுப்பது, உடலின் மீது வாகனத்தை ஏற்றுவது எனப் பல சாதனைகளை புரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புதிய தொழில்நுட்பங்களுடன் சுகாதார சேவையில் மாற்றம்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



*கொழும்பு, மார்ச் 25*

நவீன மருத்துவ சேவைகளுக்கு உகந்த வகையில் புதிய தொழில்நுட்ப மாற்றங்களுக்கு அமைய எமது நாட்டின் சுகாதார சேவையில் ஏற்படுத்தப்படவுள்ள புதிய மாற்றங்கள் குறித்து விரிவான கலந்துரையாடலை நடத்த எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துடன் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் “தலைமைத்துவம் மற்றும் திறன் மேம்பாடு” என்ற தலைப்பில் ஒருநாள் செயலமர்வு நேற்று பொலநறுவையில் நடைபெற்றது. இதில், பங்கேற்ற ஜனாதிபதி, நாட்டில் காலனித்துவ காலத்திலிருந்து இலவச மருத்துவ முறைமை காணப்படுவதாகவும், அதனை முழு உலகமும் ஏற்றுக்கொண்டுள்ளது.

அந்த கடந்த கால அனுபவங்களுடன் நாட்டில் தரமான மற்றும் உயர்தர சுகாதார சேவைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். சுகாதார சேவையில் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்களை இணைப்பதற்கான சாத்தியக்கூறுகளை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எதிர்வரும் 10 முதல் 15 ஆண்டுகளுக்குள் இந்தப் புதிய மாற்றங்களை முன்னெடுப்பதற்கு தேவையான திட்டங்களை தயாரிப்பதற்காக சுகாதாரத் துறையிலுள்ள அனைவருடனும் பரந்த உரையாடலை நடத்த எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அதற்கான யோசனைகளையும் ஆலோசனைகளையும் வழங்குமாறு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி, இந்த கலந்துரையாடல்கள் அனைத்தையும் அரசியல் மயப்படுத்தாமல் தர்க்க ரீதியாக மேற்கொள்வதன் முக்கியத்துவத்தையும் விளக்கினார்.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
25.03.2024 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 12

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மைத்திரி எதற்கு முயற்சிக்கின்றார்?

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பலவாறான சர்ச்சைக்குரிய கருத்துகள் முன்வைக்கப்பட்டிருகின்றன. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில், அப்போது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு பொறுப்பானவர் என்னும் வகையில் அவர்மீதே குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இந்த விடயத்தில் அவர் நீதித்துறையால் குற்றவாளியாகவும் அடையாளம் காணப்பட்டார். பின்னர், சனல் - 4 பிறிதொரு சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது - கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த சிவநேதுரை சந்திரகாந்தினின் நெருங்கிய சகா ஒருவரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஈஸ்டர் தாக்குதல் என்பது அடிப்படையில் கோட்டாபய ராஜபக்ஷவை அதிகாரத்துக்குக் கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு சதி நடவடிக்கையாகும் என்று ஒரு சர்ச்சை முன்வைக்கப்பட்டது.

இதன் பின்னர், இந்த விடயம் பெருமளவுக்கு மக்கள் மத்தியிலிருந்து காணாமல் போயிருந்தது. ஆனால், தற்போது மீண்டும் ஈஸ்டர் தாக்குதல் கதைகளுக்கு மைத்திரிபால சிறிசேன புதிய அத்தியாயம் ஒன்றை எழுத முற்படுகின்றார். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் நூலொன்றை வெளியிட்டிருக்கும் நிலையில் மைத்திரிபால திடீரென்று மீண்டும் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் தனக்கு விடயங்கள் தெரியுமென்றும் - தனக்கு உரிய பாதுகாப்பு வழங்கும் பட்சத்தில் அதனை தான் வெளிப்படுத்த தயாரெனவும் அவர் அறிவித்திருக்கின்றார்.

இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் மைத்திரி ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சர்ச்சைகளை ஏற்படுத்துவதானது - குறித்த விடயத்தை மறந்து போயிருந்த மக்கள் அதன்மீது கரிசனை காண்பிக்கவும் அப்போது ஆட்சியிலிருந்தவர்கள்மீது கோபம் கொள்வதற்குமான சூழலையே ஏற்படுத்தும். ரணில் விக்கிரமசிங்க ஒரு பொது வேட்பாளராக நிற்கலாம் என்னும் கணிப்புகள் வெளியாகியிருக்கின்ற நிலையிலேயே மீண்டும் ஈஸ்டர் தொடர்பான சர்ச்சைகள் திட்டமிட்டு பரப்பப்படுகின்றனவா என்னும் கேள்வியை இலகுவாகத் தவிர்க்க முடியவல்லை.

2015இல் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தமையைத் தொடர்ந்து இலங்கையின் அரசியலில் சதிகள் பற்றிய உரையாடல்கள் ஒரு பிரிக்க முடியாத விடயமாக மாறிவிட்டது. தான் சதியால் தோற்கடிப்பட்டதாகவே மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார். பின்னர், தமிழ் மக்களின் ஆதரவுடன் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன திடீரென்று இந்திய உளவுத்துறை தன்னை கொலை செய்யச் சதி செய்வதாகக் குறிப்பிட்டார். தற்போது கோட்டாபய ராஜபக்ஷ தன்னை அதிகாரத்திலிருந்து அகற்றுவதற்காக சிறுபான்மை மக்களான தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களே முன்னணியில் செயல்பட்டனர் எனவும் அதற்கு பின்னால் ஒரு சர்வதேச சதியிருப்பதாகவும் குறிப்பிடுகின்றார்.

இந்தப் பின்னணியில் நோக்கினால் இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின்போது ஒவ்வொருவரும் தங்களின் வெற்றிக்காக எவ்வாறான நகர்வுகளையும் மேற்கொள்ளலாம் என்னும் நிலைமையே காணப்படுகின்றது. அதேவேளை வெளித் தரப்புகளும் அதிகளவில் விளையாடுவதற்கான தேர்தல் களமாகவும் இது அமையக்கூடும்.

இவற்றை துல்லியமாகக் கணித்தே தமிழ் கட்சிகள் செயலாற்ற வேண்டும். அவசரப்பட்டு வார்த்தைகளை விடக்கூடாது. இதே வேளை அனைவரும் விடயங்களில் ஒன்றுபட்டு முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். தனியோட்டங்களை தவிர்க்க வேண்டும். பொது வேட்பாளர் விடயத்தில் கட்சிகள் மத்தியில் ஒத்தகருத்து ஏற்பட்ட பின்னர்தான் அதனை எவ்வாறு முன்னெடுப்பது என்பது பற்றிய கருத்துகளை வெளிப்படுத்த வேண்டும்.




# அனைத்து தமிழ் தரப்பினரையும் இணைத்து ஒரு தேசமாக இனத்தை கட்டியெழுப்புவோம்!

## ரெலோ கட்சி பிரகடனம்

*“எமது மக்களின் நலன் சார்ந்த அரசியல் அபிலாசைகளையும் உரிமையையும் வென்றெடுக்கத் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் உட்பட எமது தேசியத்தை நேசிக்கும் அனைத்துத் தமிழ் தரப்பினரையும் ஒன்றிணைத்து புலம்பெயர் உறவுகளையும் ஒருங்கு சேர்த்து ஒரு தேசமாக எமது இனத்தை கட்டியெழுப்பும் பணியில் முழுமுயற்சியோடு ஈடுபடுவோம்”,*

*இவ்வாறு ரெலோ என்று அறியப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கம் தனது 11ஆவது தேசிய மாநட்டின் பிரகடனத்தில் வெளியிட்டுள்ளது.*

*வவுனியாவில் நேற்று நடந்த அந்தக் கட்சியின் தேசிய மாநாடு நடைபெற்றது. இதன் பிடகனத்தில் தெரிவிக்கப்பட்டவை அப்படியே வருமாறு,*

*எமது மக்களின் நீண்ட கால அரசியல் அபிலாசைகளான வடக்கு கிழக்கு இணைந்த, தமிழர் தாயகத்தில், தம்மைத் தாமே ஆளுகின்ற, சுயநிர்ணய உரிமையை அனுபவிக்க கூடிய, சுயாட்சி அரசியல் கட்டமைப்பை உருவாக்குவதற்கான தொடர்ச்சியான அரசியல் வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது என்றும்,*

*இந்த இலக்கை அடைவதற்கான நிரந்தர பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து, அந்தப் பொறிமுறையை இந்தியாவின் மேற்பார்வையிலும் சர்வதேச நாடுகளின் பங்களிப்போடும் ஐ. நாவின் வழிநடத்தலோடும் புலம்பெயர் உறவுகளின் ஒருங்கிணைப்போடும் உருவாக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது என்றும்,*

*எமது தாயக பிரதேசத்தை எமது பாரம்பரிய வதிமிடமாகவும், எமது தனித்துவமான இன அடையாளத்தையும், தமிழ் மொழிக்கான அங்கீகாரத்தையும் உறுதிப் படுத்திய இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை அரசியல் யாப்பில் திருத் தங்களோடு உருவாக்கப்பட்ட மாகாண சபை ஆட்சி முறைமையை முற்று முழுதாக நடைமுறைப்படுத்த அரசுக்கு தொடர் அழுத்தங்களை பிரயோகிக்கவும்,*

*எமது இனத்திற்கு எதிராக இழைக்கப் பட்ட இனப்படுகொலை உட்பட மனித உரிமை மீறல்கள், யுத்த குற்றங்கள் மற்றும் மனிதத்துக்கு எதிரான குற்றங்களால் பாதிக்கப்பட்ட நீதி கோரி நிற்கும் எமது உறவுகளுக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்க சர்வதேச நீதிப் பொறிமுறைக்காக தொடர்ந்தும் பாடுபடுவது என்றும்,*

*வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கான நீதியை கோரி நிற்கும் எம் மக்களுக்கான நீதியை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்வது என்றும்,*

*அரச இயந்திரங்களினால் எமது தாயக பிரதேசத்தில் தொடர்ந்து அபகரிக்கப்பட்ட வந்த காணிகளை விடுவிப்பதற்கும், தொடர்ச்சியாக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் காணி அபகரிப்பின் விளைவாக எமது வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்படுவதாலும், பௌத்த சின்னங்களை நிறுவுவதன் ஊடாகவும் நமது மக்களின் வாழ்வாதாரத்தையும் இனக்குடிப் பரம்பலையும் சிதைத்து நமது சுயநிர்ணய உரிமைக்கான தகுதியை கேள்விக்குறி ஆக்க முயலும் செயல்பாடுகளுக்கு எதிரான சகல அரசியல் நடவடிக்கைகளையும் மேற்கொள்வது எனவும்,*

*நமது இனக் குடிப்பரம்பலின் செறிவைப் பேண எமது எதிர்கால சந்ததிக்கான வளமான வாழ்வை உறுதிப்படுத்தி அதனூடாக எமது இனத்தின் இருப்பை தக்க வைக்க, எமது தாயக பூமியில் பொருளாதார அபிவிருத்தியை உறுதி செய்யும் தற்சார்பு பொருளாதார கட்டமைப்பை உருவாக்கி அதை செயல்படுத்த உரிய வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவும்*


*எமது இனத்தின் கல்வி, கலை, கலாச்சாரம், பண்பாட்டு விழுமியங்களை பாதுகாப்பதோடு அவற்றை வளர்ப்பதற்கும் செழுமைப் படுத்தவும் வேலை திட்டங்களை முன்னெடுப்பது என்றும்*

*நமது மக்கள் நலன் சார்ந்து பிராந்திய அரசியல் உறவை வலுப்படுத்தவும், சர்வதேச நாடுகளின் ஆதரவை திரட்டவும் அதற்கான பூகோள அரசியல் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுப்பது என்றும்*

*மேற்கூறிய எமது மக்களின் நலன் சார்ந்த அரசியல் அபிலாசைகளையும் உரிமையையும் வென்றெடுப்பதற்கு தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் உட்பட எமது தேசியத்தை நேசிக்கும் அனைத்து தமிழ் தரப்பினரையும் ஒன்றிணைத்து புலம்பெயர் உறவுகளையும் ஒருங்கு சேர்த்து ஒரு தேசமாக எமது இனத்தை கட்டி எழுப்பும் பணியில் முழு முயற்சியோடு ஈடுபடுவது என்றும் இந்த மாநாட்டில் தமிழீழ விடுதலை இயக்கம் பிரகடனப்படுத்தி நிற்கிறது - என்றுள்ளது.*

*(ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**மார்ச் - 25 திங்கட்கிழமை**
**சோபகிருது வருடம் - பங்குனி 12**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 06.30 - 07.00 |
| ராகு காலம் | : | 07.30 - 09.00 |
| திதி | : | பிரதமை |



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கனவு நனவாகும்.

**இடபம்**
திட்டவட்டமாக காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும்.

**மிதுனம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். அழகும் இளமையும் கூடும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக்கொள்வீர்கள். மதிக்கப்படுவீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்து போகும். நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப்போய் பொல்லாப்பாக முடியும். கவனம் தேவைப்படும் நாள்.

**கன்னி**
அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். வியாபாரத்தில் பாக்கிகளை கறாராகப் பேசி வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிருப்தி உண்டாகும்.

**துலாம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு இருக்கும். புது வேலை அமையும். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உங்கள் கை ஓங்கும்.

**விருட்சிகம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் புது முடிவுகள் எடுப்பீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**தனுசு**
புதிய பாதையில் பயணிக்கத்தொடங்குவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். அதிகாரிகள் வழியவந்து உதவுவார்கள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். அலட்சியம் வேண்டாம்.

**கும்பம்**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரம் தழைக்கும். உங்களின் திறமைகள் வெளிப்படும். நன்மை கிட்டும் நாள்.

**மீனம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். விருந்தினர்களின் வருகையால் வீடு களைக்கட்டும். அதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

# அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி எதிர்க்கட்சிகளை அழிக்கிறது பா. ஜ. க.



திருவாரூர், மார்ச் 25

அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகளை அழிக்க பா. ஜ. க. முயற்சிப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

திருவாரூரில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பழனிசாமி, தேர்தல் அறிக்கை என்ற பெயரில் பம்மாத்து அறிக்கையை வெளியிட்டுள்ளார். ஆளுநரை நியமிக்கும் போது மாநில அரசிடம் ஆலோசனை பெற்று நியமிக்க வேண்டும் என்னும் தி. மு. க. தேர்தல் அறிக்கையின் நகலை அவர் வெளியிட்டுள்ளார்.

தி. மு. க. அரசுக்கு குடைச்சல் கொடுக்கும் ஆளுநரை எப்போதும் அவர் கண்டித்தது கிடையாது. ஆனால், அ. தி. மு. க. ஆட்சியின்போது ஆளுநர் ஆய்வுப் பணியில் ஈடுபட்டதைக் கண்டித்து நாங்கள் போராட்டம் நடத்தினோம். தற்போதும் உச்ச நீதிமன்றம் வரை சென்று ஆளுநரைக் கண்டித்துப் போராடி வருகிறோம்.

அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகளை அழிக்க பாஜக அரசு முயற்சிக்கிறது. தி. மு. கவைப் பற்றி பல்வேறு மாநிலங்களில் விமர்சனம் செய்த பிரதமர் மோடி, தற்போது தமிழகத்துக்கே வந்து விமர்சனம் செய்யத் தொடங்கியுள்ளார். தி. மு. கவைப் பொறுத்தவரை ஏச்சு, ஏளனம், வசவுகளை உரமாக்கிக் கொள்வோம் - என்றார். (ஐ)

# வேடந்தாங்கல் பறவைகள்போல பா. ம. க. கூட்டணியை மாற்றுகிறது

## அ. தி. மு. க. பொதுச் செயலர்



சேலம், மார்ச் 25

வேடந்தாங்கல் பறவைகள் போல பா. ம. க. அடிக்கடி கூட்டணியை மாற்றி வருகிறது என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பழனிசாமி கூறினார்.

சேலத்தில் அவர் செய்தியாளர்களை சந்தித்தபோது,

வேடந்தாங்கல் பறவைபோல பா. ம. க அடிக்கடி கூட்டணியை மாற்றிவருகிறது. ஏரியில் தண்ணீர் நிரம்பி இருக்கும்போது பறவைகள் வரும். தண்ணீர் வற்றினால் சென்றுவிடும். அது போலத்தான் ராமதாஸும். ஏற்கெனவே பா. ஜ. கவுக்கு பூச்சிய மதிப்பெண் கொடுப்பேன் என்று கூறியிருந்த ராமதாஸ், தற்போது பா. ஜ. க. கூட்டணியில் இணைந்து, பா. ஜ. க. கூட்டணி வெல்லும் என்கிறார். ஒவ்வொரு தேர்தலிலும் ஒரு கட்சியை ஆதரிக்கும் கட்சிதான் பா. ம. க.

அ. தி. மு. க. கூட்டணியை நம்பி இல்லை. கூட்டணிக்கு கட்சிகள் வந்தால் வரவேற்போம். வராவிட்டால் சொந்த பலத்தில் தேர்தலை சந்திப்போம். மக்களுக்கு நிறைய நன்மைகள் செய்த, பொன்விழா கண்ட கட்சி அ. தி. மு. க. எங்கள் ஆட்சியில் தான் தமிழகம் ஏற்றம் பெற்றது. எனவே, கூட்டணியை நம்பி அ. தி. மு. க. இல்லை -என்றார். (ஐ)

# தமிழ்நாடு ஆளுநர் ரவியை பதவியிலிருந்து நீக்குங்கள்

## திருமாவளவன் தெரிவிப்பு



சென்னை, மார்ச் 25

ஆளுநரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

ஆளுநர் விதித்தத் தடைகளையெல்லாம் மீறி உச்சநீதிமன்றத்தின் உத்தரவின் காரணமாக, பொன்முடி மீண்டும் உயர்கல்வித் துறை அமைச்சராகியிருக்கிறார். இது தி. மு. க. அரசுக்குக் கிடைத்த வெற்றி மட்டுமல்ல, அரசமைப்பு சட்டத்துக்குக் கிடைத்த வெற்றியாகும். ஆளுநருக்கு நீதிமன்றம் கண்டனம் தெரிவித்ததைத் தொடர்ந்து, இப்போது பொன்முடிக்கு ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்து வைத்துள்ளார்.

தனக்கான மரபுகளை மீறி அரசியல் ரீதியாகத் தலையிடும் செயல்களில் ஆளுநர் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். அவருக்கு அரசியலில் ஆர்வம் இருந்தால் பதவியை ராஜிநாமா செய்துவிட்டுத் தேர்தலில் நேரடியாகப் போட்டியிடலாம். அதை விட்டுவிட்டு ஆளுநர் பதவியில் இருந்து கொண்டே ஓர் அரசியல் வாதியைப்போல் செயல்படுவதும், அரசமைப்புச் சட்டத்தையும் உச்சநீதிமன்றத்தையும் அவமதிப்பதும் ஏற்புடையது அல்ல - என்றார். (ஐ)

# வீரப்பன் மகள் நாம் தமிழர் கட்சியில் போட்டி!

சென்னை, மார்ச் 25

இந்திய பாராளுமன்றத் தேர்தலில் கிருஷ்ணகிரி தொகுதியில் நாம் தமிழர் கட்சி சார்பில் வீரப்பன் மகள் வித்யா போட்டியிடுகிறார்.

இந்திய பாராளுமன்றத்தின் மக்களவை தேர்தல் வரும் ஏப்ரல் 19 ஆம் திகதி தொடங்கி ஜூன் வரை 7 கட்டங்களாக நடைபெறுகிறது. இதில் தமிழ்நாட்டில் முதல் கட்டத்திலே வரும் ஏப்ரல் 19 ஆம் திகதி நடக்கிறது.

2024 மக்களை தேர்தலில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சியின் 20 பெண் மற்றும் 20 ஆண் அடங்கிய 40 வேட்பாளர்களை ஒரே மேடையில் அறிமுகப்படுத்தினார் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான்.

அப்போது கிருஷ்ணகிரி தொகுதியில் நாம் தமிழர் கட்சி சார்பில் வீரப்பன் மகள் வித்யா போட்டியிடுவதாக அறிவித்தார். இதன்போது," ஐயா வனம் காக்க போராடினார் இனம் காக்க நானும் என் மகளும் போராடுகிறோம்" என சீமான் தெரிவித்தார்.

# ரெலோ கட்சியின் தேசிய மாநாடு வவுனியாவில் நேற்று நடைபெற்றது!




**வவுனியா, மார்ச் 25**

**தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) 11ஆவது தேசிய மாநாடு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.**

கட்சியின் கொடி ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாயின.

விடுதலை போராட்டத்துக்காக உயிர் நீத்த அனைத்து பொது மக்களுக்கும் போராளிகளுக்குமாக ஒரு நிமிட அக வணக்கமும் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கட்சியின் மாநாட்டுப் பிரகடனம் வாசிக்கப்பட்டதுடன், சிறப்புரைகளும் நிகழ்த்தப்பட்டன.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, புளொட் கட்சியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், கோவிந்தம் கருணாகரம் எம். பி., இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், செயலாளர் சிவசக்தி ஆனந்தன், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள், இளைஞர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

(ஐ)

# பனைமரக் குற்றிகளை கொண்டு சென்றவர் கைது!

*யாழ்ப்பாணம், மார்ச் 25*

அனுமதியற்ற சட்ட விரோத பனை மரங்களை ஏற்றிய கெப் ரக வாகனத்துடன் சந்தேக நபர் ஒருவரை யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் விசேட குற்ற புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியிலேயே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)



# பட்டம்பெற்ற மாணவர்கள் கிராமத்தினரால் பாராட்டு



*யாழ்ப்பாணம், மார்ச் 25*

கோப்பாய் தெற்கு (இருபாலை) கந்தவேள் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட திருலோகச்சந்திரன் சசிகலா, பார்த்திபன் ஜெனிதா ஆகியோரை கிராமத்தவர் சேர்ந்து பாராட்டும் வைபவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

த. அஜித்குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன், கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் உமாவதி ரவிகரன் மற்றும் பாடசாலை உபஅதிபர் க. உமாகரன் சிரேஷ்ட ஆசிரியர் நளினி நவநேசன் ஆகியோர் பிரதம மற்றும் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று பட்டம் பெற்று கிராமத்திற்குப் பெருமை சேர்த்த இருவரையும் பாராட்டிக் கௌரவித்தனர்.

இருபாலையில் யாழ். பருத்தித்துறை பிரதான வீதியில் இருந்து கிழக்கே இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் இந்தப் பாடசாலை கஷ்டப் பிரதேச வகுதிக்குள் அடங்கும் பாடசாலையாக காணப்படுகின்றது.

கிராம மக்களும் பாடசாலைச் சமூகத்தவரும் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்டு பட்டம் பெற்ற இருவரையும் பாராட்டி கௌரவித்தனர்.

(ஐ)

# நெடுவூர்த் திருவிழா ஓகஸ்ட் 04 - 10 வரை!

*யாழ்ப்பாணம், மார்ச் 25*

உலகம் முழுவதும் பரந்து வாழும் நெடுந்தீவின் உறவுகளை ஒன்றிணைத்து பிரதேச அபிவிருத்தியையும் உள்ளூரில் வாழும் உறவுகளின் வாழ்வியலை மேம்படுத்தும் நோக்கில் நெடுந்தீவில் எதிர்வரும் ஓகஸ்ட் 4 முதல் 10 வரை 'நெடுவூர்த் திருவிழா' நடைபெறவுள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் நெடுவூர்த் திருவிழாவின் ஏற்பாட்டாளர் கிருபாகரன் தர்மலிங்கம் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

போராலும் பொருளியல் போராலும் சிதறுண்டு போனோரெல்லாம் உலகின் பல பாகங்களிலும் வெளி மாவட்டங்களிலும் பரந்து வாழும் இச்சூழலில் எமது தாய்மண் உறவுகள் ஒன்றிணைந்து கடந்த கால வாழ்வியலை மகிழ்வோடு மீட்டுப் பார்க்கும் அழகிய தருணமாக இந்த நெடுவூர்த் திருவிழா அமையும்.

இவ்விழாவில் பல்துறை சார்ந்த நிகழ்வுகளை உறவுகளின் பங்களிப்புடன் நடத்துவதற்கு நாம் எண்ணியுள்ளோம். இதன் மூலம் நெடுந்தீவு பிரதேச அபிவிருத்தியினையும் உள்ளூரில் வாழும் உறவுகளினது வாழ்வியலையும் மேம்படுத்துவதே எமது நோக்கம்- என்றார். (ஐ)

# கிளிநொச்சி வளாகம் பல்கலைக்கழமாக உயரும்!

## அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

*கிளிநொச்சி, மார்ச் 25*

யாழ்ப்பாண பல்கலைகழகத்தின் கிளிநொச்சி வளாகம் எதிர்காலத்தில் கிளிநொச்சி பல்கலைக்கழகமாக மாற்றம்பெறும் வாய்ப்புகள் வரலாம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அறிவியல் நகர் பொறியியல் துறையின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், யாழ். பல்கலைகழகத்திற்கு ஒரு பொறியியல் துறை தேவையென பேராசிரியர் துரைராஜாவின் 33 வருட கனவு நிறைவு பெற்று இன்று பத்து வருடங்கள் கடந்துவிட்டன்.

அதுமட்டுமல்லாது குறித்த வளாகம் பல ஆயிரம் மாணவர்களை பிரசவித்துவிட்டது. மேலும் இன்று யாழ். பல்கலையின் வளாகமாக உள்ள கிளிநொச்சி பொறியியல்பீடம் அதனுடன் இணைந்த தொழில்நுட்ப பீடம், விவசாய பீடம் எதிர்காலத்தில் கிளிநொச்சியில் பல்கலைக்கழகம் உருவாகும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது- என்றார்.

(ஐ)


படங்கள் ஐ. சிவசாந்தன்

யாழ்ப்பாணம் ஸ்ரீ வேங்கடேச பெருமாள் ஆலயத்தின் குடமுழுக்குப் பெருவிழா நேற்று நடைபெற்றபோது...!

# மக்களின் கருத்துகளை அறிவதற்கு ரூ. 1000 கோடி செலவிட்ட கட்சிகள்!

கொழும்பு, மார்ச் 25

**மக்களின் கருத்துகளை அறிவதற்காக மூன்று முக்கிய அரசியல் கட்சிகள், ஆய்வு நிறுவனங்களுக்கு சமீபத்தில், ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் கொடுத்துள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது.**

சில ஆய்வு நிறுவனங்கள் ஏற்கனவே தங்களின் ஆய்வு அறிக்கைகளை அந்தந்த அரசியல் கட்சிகளிடம் சமர்ப்பித்துள்ளன என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இந்த நாட்களில் மூன்று ஆய்வு முகவர்கள் கணக்கெடுப்பு நடத்தி வருகின்றன என்று தெரிய வருகிறது.

பொதுமக்களின் கருத்துகளுக்கு ஏற்ப எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை திட்டமிடுவதே இந்த கணக்கெடுப்பின் நோக்கம் என அரசியல் கட்சி பிரதிநிதிகள் குழு தெரிவித்துள்ளது.

மேலும், தேர்தல் மேடைகளில் சாதகமான கணக்கெடுப்பு அறிக்கைகளை முன்வைத்து அரசியல் ஆதாயம் பெறுவதும் இதன் மற்றொரு நோக்கமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கிளிநொச்சியில் தேங்காய்க்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது

*கிளிநொச்சி, மார்ச் 25*

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளை ஈ தாக்கம் காரணமாக தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வெண் ஈ தாக்கம் காரணமாக தேங்காய்களின் கிடைப்பனவு வெகுவாக குறைந்துள்ளது. சந்தையில் தேங்காய் ஒன்றின் விலை சுமார் 120 ரூபாயாக உள்ளது.

மிகக்குறைந்தளவிலான தேங்காய்களே கிடைக்கின்றன. வரும் நாட்களில் அதுவும் இல்லாமல் போகலாம் என்று தென்னை செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், வெள்ளை ஈ தாக்கம் தொடர்பில் அதிகாரிகள் விரைந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ)

# இன்று முதல் ஆரம்பப் பிரிவு மாணவர்க்கு உணவு வழங்கல்!

*கொழும்பு, மார்ச் 25*

ஆரம்பப் பிரிவு முதல் தரம் ஐந்து வரையிலான சிறார்களுக்கு இன்று திங்கட்கிழமை முதல் காலை உணவு வழங்கும் திட்டம் கல்வி அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊட்டச்சத்து நிபுணர்களின் ஆலோசனையின் அடிப்படையில் காலை 7.30 மணி முதல் 8.30 மணி வரை காலை உணவு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உணவு வழங்கும் திட்டத்தில் போசாக்கு மற்றும் சுகாதாரம் என்பவற்றில் உணவு முறைமை உயரிய மட்டத்தில் பேணுவதற்கு கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதோடு, இதற்காக ஆயிரத்து 660 கோடி ரூபாய் தொகை செலவிடப்படவுள்ளது.

9,134 அரச பாடசாலைகளின் 16 இலட்சம் பாடசாலை மாணவர்கள் இந்த திட்டத்தில் பயனடைவார்கள் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# வவுனியாவில் நேற்று காசநோய் விழிப்புணர்வு

*வவுனியா, மார்ச் 25*

காசநோய் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் வவுனியாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

வவுனியா காசநோய் கட்டுப்பாட்டு மருத்துவ அதிகாரி கே. சந்திரகுமார் தலைமையில் மருத்துவமனை பின்வீதியில் அமைந்துள்ள மார்பு நோய் சிகிச்சைப் பிரிவு வளாகத்தில் 'ஆம் எங்களால் காசநோயை முடிவுக்கு கொண்டுவர முடியும்' எனும் தொனிப்பொருளில் உலக காசநோய் தினமான விழிப்புணர்வு கருத்துரைகள் நடைபெற்றன.

அதன் பின்னர், அங்கிருந்து விழிப்புணர்வு ஊர்வலம் ஆரம்பமானது.

இந்த ஊர்வலம் கண்டி வீதிக்கு சென்று, அங்கிருந்து பண்டாரவன்னியன் சதுக்கத்தை அடைந்து, மன்னார் வீதி ஊடாக குருமன்காடு சந்தி, புகையிரத வீதி ஊடாக வவுனியா நகர், அங்கிருந்து பசார் வீதி ஊடாக ஹொரவப்பொத்தானை வீதிக்கு சென்று மருத்துவமனையில் நிறைவடைந்தது.

இந்த ஊர்வலத்தில் காசநோய் கட்டுப்பாட்டு பிரிவு வைத்தியர்கள், தாதியர்கள், தாதிய மாணவர்கள் ஆகியோருடன் முச்சக்கர வண்டிகளும் விழிப்புணர்வு பதாதைகளை தாங்கியவாறு ஊர்வலமாக வலம் வந்தனர். (ஐ)

# தொழிற்சாலைகள் திணைக்களத்தில் அதிகளவு ஊழியர் பற்றாக்குறை!

*கொழும்பு, மார்ச் 25*

அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தில் ஊழியர் பற்றாக்குறை அதிகம் உள்ளது என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எஸ். சத்தியானந்த தெரிவித்தார்.

அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் அனுமதி பெற்ற அலுவலக ஊழியர்கள் 769ஆக இருந்த போதிலும், தற்போது 311 பேர் மட்டுமே பணி புரிந்து வருகின்றனர்.

எனவே, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கையை முன்வைத்து தேவைக்கு ஏற்ப ஊழியர்களை பணியமர்த்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எஸ். சத்தியானந்த தெரிவித்துள்ளார். (ஐ)

# தேர்தல் சட்டத்தில் திருத்தம் பரிந்துரைக்கும் காலம் நீடிப்பு

*கொழும்பு, மார்ச் 25*

தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணை குழுவிடம் இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசத்தை அரசாங்கம் நீட்டித்துள்ளது.

அந்தக் குழுவின் பரிந்துரைகளை ஏப்ரல் 15ஆம் திகதிக்கு முன்னர் அளிக்க வேண்டும் என்று முன்பு தெரிவிக்கப்பட்டது.

தற்போது இது, மேலும் இரண்டு மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஜூன் 15ஆம் திகதி அறிக்கை கையளிக்கப்பட வேண்டும். (ஐ)

# 4 கிலோ கஞ்சாவுடன் கடற்படையினர் கைது!

*யாழ்ப்பாணம், மார்ச் 25*

காரைநகர் பகுதியில் கேரள கஞ்சாவுடன் இரண்டு கடற்படையினர் உள்ளிட்ட மூவர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 4 கிலோ 400 கிராம் கேரள கஞ்சா இதன்போது கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதானவர்கள் காரைநகர் கடற்படை முகாமின் புலனாய்வு பிரிவினர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தவறான தகவல் வழங்கும் பொலிஸார் மீது நடவடிக்கை

## அமைச்சர் டிரான் அலஸ்

*யாழ்ப்பாணம், மார்ச் 25*

தவறான தகவல்களை வழங்கும் பொலிஸாருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

"நாங்கள் விரும்பியபடி வேலை செய்ய முடியாதவர்கள் யாராவது இருந்தால் அவர்கள் சீருடையைக் கழற்றிவிட்டு வீட்டுக்கு செல்லுங்கள்" என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)



# ஐ. தே. கவின் மே தின கூட்டம் மருதானையில்

*கொழும்பு, மார்ச் 25*

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின கூட்டத்தை மருதானையில் பிரமாண்டமாக நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மே தினக் கூட்டம் நடைபெறவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின பேரணியை சுதந்திர சதுக்கத்தில் நடத்துவதற்கு முன்னர் ஆலோசிக்கப்பட்ட போதிலும், மருதானையில் நடத்தத் ஜனாதிபதி ரணில் பரிந்துரைத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின கூட்டத்தில் அமைப்பாளர்கள் தலா 60 பேருடன் பங்கேற்க வேண்டும் என பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கிணங்க ஐக்கிய தேசியக் கட்சி மாபெரும் மக்கள் கூட்டத்தின் பங்கேற்புடன் மே தினத்தை நடத்தவுள்ளது என்றும் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# 7 கிலோ கேரள கஞ்சாவுடன் கிளிநொச்சி இளைஞன் கைது!

*கிளிநொச்சி, மார்ச் 25*

உருத்திபுரம் பகுதியில் கேரள கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் கடற்படை மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுற்றிவளைப்பு நடவடிக்கையிலேயே இவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து சுமார் 7 கிலோ 25 கிராம் நிறையுடைய கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கிளிநொச்சியை சேர்ந்த 29 வயது நபராவார். (ஐ)

# கூரிய ஆயுதத்தால் குத்தி ஒருவர் கொலை!

*கொழும்பு, மார்ச் 25*

நண்பர்களிடையே ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தில் ஒருவர் குத்திக் கொல்லப்பட்டார்.

கம்பஹா - அஸ்கிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 33 வயதான ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் கம்பஹா பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# நல்லிணக்க குழுவை நிறுவுவதே முன்னோக்கிப் பயணிக்க வழி!

## ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை

கொழும்பு, மார்ச் 25

**இலங்கையில் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள் நிகழாமை என்பவற்றை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு, சிதிலமடைந்த மக்களின் காயங்களுக்கு மருந்திடக் கூடியதும் அனைவரையும் ஒன்றிணைக்கக் கூடியதுமான வகையில் 'உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு' ஒன்றை நிறுவுவதே முன்னோக்கிப் பயணிப்பதற்கான வழியாக அமையும் என நீதியரசர் நவாஸ் தலைமையிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

இதேவேளை இந்தச் செயன்முறைகள் தொடர்பில் தாம் கொண்டிருக்கும் உண்மையான தன்முனைப்பை நிரூபிக்கக்கூடிய வகையில் 'நிலைமாறுகால நீதி தொடர்பான உயர் அதிகாரமுடைய சர்வதேச ஆலோசனை பேரவையை' அரசாங்கம் உருவாக்கவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் மேம்பாடு தொடர்பான முன்னைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் மற்றும் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்து ஆராய்தல், புலனாய்வு செய்தல், அறிக்கையிடல் மற்றும் அவசியமான முன்மொழிவுகளைச் செய்தல் ஆகியவற்றுக்காக உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ. எச். எம். டி. நவாஸ் தலைமையில் ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாந்து, ஓய்வுபெற்ற மாவட்டச் செயலாளர் நிமல் அபேசிறி மற்றும் யாழ். நகர முன்னாள் மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகிய மூவர் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு கடந்த 2021ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டது.

இந்த ஆணைக்குழு 623 பக்கங்களைக் கொண்ட இறுதி அறிக்கையை வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இளைஞனை அடிமையாக்கிய பெண் மீட்டுத் தருமாறு தாயார் முறைப்பாடு!

கொழும்பு, மார்ச் 25

20 வயது இளைஞனுக்கு பரிசுப் பொருட்களைக் கொடுத்து அவனை அடிமையாக்கி தவறான முறையில் பயன்படுத்துகிறார் என்று 46 வயதுப் பெண்ணுக்கு எதிராக களுத்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்தாலியில் நீண்டகாலமாக வசித்து நாடு திரும்பிய 46 வயதான திருமணமாகாத பெண் ஒருவரே தனது அயல் வீட்டில் வசித்து வரும் இளைஞரை இவ்வாறு செய் துள்ளார் என்று இளைஞனின் தாய் முறைப்பாடு செய்துள்ளார்.

சந்தேகநபரான பெண் அந்த இளைஞனுக்கு பெறுமதிமிக்க பொருட்களை வழங்கி தன்னுடனேயே தங்கவைத்துள்ளார். எனவே தனது மகனை மீட்டுத் தருமாறும் அந்த முறைப்பாட்டில் இளைஞனின் தாய் தெரிவித்துள்ளார். (ஐ)

# விசாரணை பிடியில் பொலிஸ் சார்ஜன்ட்

கொழும்பு, மார்ச் 25

சட்டவிரோத சொத்துகளை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவருடன் தொடர்பைப் பேணிய பொலிஸ் சார்ஜன்ட் தொடர்பான தகவல்களை பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ளது.

இந்த பொலிஸ் சார்ஜன்ட் சந்தேக நபருடன் சேர்ந்து சட்டவிரோதமான முறையில் பணம் சம்பாதித்தாரா என்பது குறித்து பொலிஸ் தலைமையகம் விசாரணை நடத்தி வருகிறது.

10 கோடி ரூபாய் பெறுமதியான சொத்துகள் இந்த சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன என்று சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# பெரிய வெங்காயம்மீதான ஏற்றுமதி தடை நீடிப்பு

புதுடில்லி, மார்ச் 25

பெரிய வெங்காயம் ஏற்றுமதிக்கு இந்தியா விதித்துள்ள தடையை மறு அறிவித்தல் வரை நீடிக்க அந்த நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவும், உள்நாட்டுச் சந்தையில் அதிக அளவில் வெங்காயம் கையிருப்பை வைக்கவும் நோக்கமாக கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த டிசெம்பரில், இந்திய அரசு பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு தடை விதித்த நிலையில், எதிர்வரும் 31ஆம் திகதியுடன் இந்த ஏற்றுமதி தடை நிறைவடையவிருந்தது.

இந்தியா விதித்துள்ள இந்த தடையால், பல நாடுகளில் வெங்காயத்தின் விலை உயர்ந்துள்ளது. மேலும் இலங்கையில் பெரிய வெங்காயத்தின் விலை வேகமாக அதிகரித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐஸ் போதையுடன் பெண் கைது!

கொழும்பு, மார்ச் 25

ஐஸ் போதைப்பொருளுடன் பெண் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - தலங்கமை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டார்.

இவரிடமிருந்து 10 கிராம் 700 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ஐ)

# அத்தியாவசியப் பொருட்களின் விலை தினமும் அறிவிக்கப்படும்!

## நிதி இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 25

அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் மற்றும் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி குறித்த அதிகரித்துவரும் கவலைகளுக்கு பதிலளிக்கும் வகையில், நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு சந்தை நோக்கில் புதிய உத்தி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சியம்பலாபிட்டிய, இறக்குமதி செய்யப்பட்ட



பொருட்களின் விலைகள் மற்றும் பெறுமதி சேர் வரி (வற்) இனி நாளாந்த அடிப்படையில் வெளியிடப்படும் என அறிவித்தார்.

எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ள இந்த முயற்சி நுகர்வோர் விவகார அதிகார சபையால் நிறைவேற்றப்படும்.

பணவீக்க அழுத்தங்களுக்கு மத்தியில் நுகர்வோருக்கு நிகழ்நேரத் தகவல் மற்றும் அவர்களின் செலவினங்களில் சிறந்த கட்டுப்பாட்டை வழங்குவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பண்டிகைக் காலங்களில் இடையூறு ஏற்படக்கூடிய சாத்தியமான தட்டுப்பாடுகளைத் தவிர்த்து, சரக்குகள் தடையின்றி செல்வதற்கு உத்தரவாதம் அளிக்க தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக சியம்பலாபிட்டிய உறுதிப்படுத்தினார். (ஐ)

# மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாய நிலைமை

கொழும்பு, மார்ச் 25

மருந்துகள் மற்றும் மருத்துவ பொருட்கள் பற்றாக்குறை மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அபாயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதேநேரம், 2025ஆம் ஆண்டுக்கான ஆணைகளை மருத்துவ வழங்கல் பிரிவு வழங்கத் தவறியமையால் ஏற்படக்கூடிய மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களின் தட்டுப்பாட்டுக்கு தாம் பொறுப்பல்ல என அரச மருந்துகள் ஒழுங்குமுறைக் கூட்டுத்தாபனம் சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டிற்குத் தேவையான மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்களுக்கான ஓடர்கள் குறித்து மருத்துவ வழங்கல் பிரிவு ஜனவரி 2024இற்குள் மருந்து ஒழுங்குமுறை கூட்டுத்தாபனத்துக்குத் தெரிவிக்க வேண்டும். ஏனெனில் கொள்முதல் பணிகளுக்கு சராசரியாக 9 மாதங்கள் ஆகும்.

670 மருந்துகள் மற்றும் கிட்டத்தட்ட ஆயிரம் சத்திரசிகிச்சை உபகரணங்களுக்கான ஓடர்கள் வழங்கப்படவுள்ள போதிலும், தரவு அமைப்பில் உள்ள சிக்கல்களால் அவற்றைச் செயல்படுத்த முடியவில்லை என்று மருத்துவ வழங்கல் துறை சுட்டிக்காட்டுகிறது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. ஓடர்கள் வராததால், 2025 ஜனவரி முதல் மருந்துகள் அல்லது அறுவை சிகிச்சை உபகரணங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டால் பொறுப்பேற்க மாட்டோம் என சட்டபூர்வ மருந்துகள் கூட்டுத்தாபன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மருந்துகள் மற்றும் மருத்துவ பொருட்கள் பற்றாக்குறை மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அபாயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். (ஐ)

# பொது வேட்பாளரை மையப்படுத்தி ஜனாதிபதி தேர்தலில் கூட்டணி!

கொழும்பு, மார்ச் 25

அடுத்து வரும் ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை மையப்படுத்திய கூட்டணியை அமைப்பதே நோக்கம். இதன் அடுத்த கட்டமாக இடதுசாரி கொள்கையுடையவர்களுடன் பேச்சு நடத்தவுள்ளதாக மனிதநேய மக்கள் கூட்டணியின் தலைவர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.


மேலும், நாம் புதிய மாற்றம் ஒன்றை நோக்கியே புதிய கூட்டணியை ஒருங்கிணைத்துள்ளோம். இந்தக் கூட்டணியான, கொள்கையளவில் இணைந்து செயல்படக்கூடியவர்களுடன் கைகோப்பதற்கு தயாராக உள்ளது.


அந்த வகையில் இடதுசாரி சிந்தனையுடையவர்களுடன் அடுத்தகட்டமாக பேச்சுக்கள் முன்னெடுக்கப்படவுள்ளது. குறிப்பாக இந்தச்செயல்பாட்டில் புத்திஜீவிகள், முற்போக்கு சிந்தனையாளர்கள் எம்முடன் கைகோக்கத் தயாராக உள்ளனர்.

இந்நிலையில், அடுத்து ஜனாதிபதித் தேர்தலே நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அரசமைப்பின் பிரகாரம் அதற்கான சந்தர்ப்பங்களே அதிகமாகவுள்ளது.

அவ்வாறு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில் நாம் பரந்துபட்ட கூட்டணியில் பங்கேற்பதற்கு தயாராகவே உள்ளோம். ஆனால், அந்தக் கூட்டணியானது பொதுவேட்பாளர் ஒருவரை மையப்படுத்தியதாக அமைய வேண்டும். கொள்கையளவில் இணைந்து பயணிக்கக்கூடிய வேட்பாளராக இருக்க வேண்டும்.

இந்த விடயங்கள் சம்பந்தமாக அடுத்து வரும் நாட்களில் நாம் தீவிரமாக ஆராய்ந்து எமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவோம் - என்றார். (ஐ)





# திருக்கோணேஸ்வர ஆலயத்தின் பங்குனி திருவிழா நேற்று ஆரம்பம்!

திருகோணமலை, மார்ச் 25

வரலாற்று சிறப்புமிக்கதும் பாடல் பெற்ற தலமுமான திருகோணமலை திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் பங்குனி மாத பெருந்திருவிழா நேற்ற கொடியேற்றதுடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 21 நாட்கள் நடைபெறவுள்ள இந்தத் திருவிழாவில் 17ஆம் நாளான - எதிர் வரும் ஏப்ரல் 9ஆம் திகதி செவ்வாய்கிழமை இரதோற்சவமும் மறுநாள் புதன்கிழமை பாபநாச தீர்த்தத் திருவிழாவு நடைபெற்று கொடி இறக்க நிகழ்வும் நடைபெறும்.

தொடர்ந்து ஏப்ரல் 11ஆம் திகதி வியாழக்கிழமை பூங்காவன திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை சமுத்திர திருவிழாவும் நடைபெறும்.

பெருந்திருவிழா நாட்களில் காலை 8 மணிக்கும் மாலை 3:30 மணிக்கும் அபிஷேக கிரியைகள் ஆரம்பமாகி தொடர்ந்து தம்ப பூசை, வசந்த மண்டப பூசை நடைபெற்று பகல் திருவிழாவின் பின்னர் சுவாமி உள்வீதி வலம் வந்தும் மாலை திருவிழாவில் பின்னர் உள்வீதி, வெளி வீதி வலம் வந்தும் அடியார்களுக்கு அருள் காட்சி கொடுப்பார். (ஐ)

# பொது பணி மன்றத்தால் உலருணவு அன்பளிப்பு




கல்முனை, மார்ச் 25

கல்முனை பிராந்தியத்தில் பல்வேறுபட்ட சமூக சேவைகள் செய்து வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமான கல்முனை பொதுப் பணி மன்றம் வருமானம் குறைந்த 250 பேருக்கு உலருணவு பொதிகள் வழங்கி வைத்தது.

அந்த அமைப்பின் தலைவர் தொழிலதிபர் அல்ஹஜ் எஸ். எல் அமீர் (நயீர்) தலைமையில் அதன் பணிமனையில் நடைபெற்றது.

இதன்போது அமைப்பின் செயளாலர் நிசார் மஜீட், உயர்பீட உறுப்பினர்களான பி. டி. கபீர், எம். அஸ்வர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# வாழைச்சேனை நீதிமன்றிலிருந்த போதைப்பொருட்கள் திருட்டு!

மட்டக்களப்பு, மார்ச் 25

வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதி மன்றத்தின் களஞ்சிய அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட பெறுமதிமிக்க போதைப்பொருள் திருடப்பட்டதாக களஞ்சியத்துக்கு பொறுப்பானவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

களஞ்சியத்தின் கூரையைப் பிரித்து நுழைந்து இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் மற்றும் நீதிமன்ற காவலர் என இருவர் காவல் கடமையில் இருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஐ)

# ஜனாதிபதிக்கு ஆசி வேண்டி மட்டக்களப்பில் விசேட பூசை



மட்டக்களப்பு, மார்ச் 2

ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவின் பிறந்த தினமான நேற்று மட்டக்களப்பு - புளியந்தீவு சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

மண்முனை வடக்கு பிரதேச ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் சங்கரதாஸ் மகேந்திரராஜாவின் ஏற்பாட்டில்

ஆலய பிரதம குரு பகீரத சர்மா தலைமையில் வழிபாடுகள் இடம்பெற்றன.

ஜனாதிபதிக்கு ஆசி வேண்டி விசேட அர்ச்சனை மற்றும் பூசைளும் நடைபெற்றன. இதில், ஐ. தே. கட்சியின் ஆதவாளர்கள் பங்கேற்றனர். (ஐ)

# காசநோய் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்வு

அக்கரைப்பற்று, மார்ச் 25

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய மார்பு சிகிச்சைப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட நடைபவனியும் விழிப்பூட்டல் கருத்தரங்கும் சனிக்கிழமை அம்பாறை - சாய்ந்தமருதில் நடைபெற்றது.

"ஆம் எம்மால் காச நோயை இல்லாதொழிக்க முடியும்" எனும் தொனிப்பொருளில் பிராந்திய மார்பு சிகிச்சைப் பிரிவு பொறுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவர் ஏ. எல். அப்துல் கபூர் தலைமையில் நடைபெற்றது.

சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசல் முன்பாக ஆரம்பித்த நடைபவனி சாய்ந்தமருது பிரதேச மருத்துவமனை வரை சென்றதுடன் அங்கு விழிப்புணர்வு




கருத்தரங்கு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவர் எம். சி. எம். மாஹிர் மலேரியா தடுப்பு பிரிவின் பொறுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவர் .எம் எம் நௌஷாத் ஆயுர்வேத பிரிவின் பொறுப்பு வைத்தியர் பாலியல் தொற்று நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஐ.எல். ஜலால்தீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ)







பிரசித்திபெற்ற திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலய பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றவேளை....

# காசாவில் உடனடி போர் நிறுத்தம்!

**ரபா நகரம் செல்வதற்கு முன்னர் ஐ. நா. பொதுச் செயலர் வலியுறுத்து**




ரபா, மார்ச் 25

**காசாவில் உடனடியாக போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்று ஐ. நா. பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டெரஸ் மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார்.**

**காசாவின் ரபா நகருக்கு சென்றுள்ளார் ஐ. நா. பொதுச் செயலாளர். அங்கு செல்வதற்கு முன்னர், எகிப்திய எல்லையான இந்த அழைப்பை விடுத்தார்.**

"துப்பாக்கிகளை அமைதிப்படுத்த வேண்டிய நேரம் இது", என்று அவர் கூறினார்.

காசாவில் 11 இலட்சம் மக்கள் பட்டினிச் சாவுக்கு எதிராக போராடி வருகின்றனர் என்று ஐ. நா. நடத்திய உணவு பாதுகாப்பு மதிப்பீட்டில் தெரிய வந்தது. மனிதர்களால் உருவாக்கப்பட்ட இந்தப் பஞ்சம் மேலும் மோசமாகி வருகிறது.

உணவு லொறிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமை தார்மீக செயல் அல்ல என்று தெரிவித்துள்ள அதேசமயம், பணயக் கைதிகளாகப் பிடிக்கபபட்டுள்ள இஸ்ரேலியர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் குட்டெரஸ் கூறினார்.

இதேநேரம் இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் காட்ஸ் தனது எக்ஸ் தளத்தில், "காசாவில் மனிதாபிமான நிலைமைக்கு குட்டெரஸ் இஸ்ரேலை குற்றஞ்சாட்டினார். ஆனால், உதவிகளை கொள்ளையடிக்கும் ஹமாஸ் போராளிகளை அவர் கண்டிக்கவில்லை", என்று கூறியுள்ளார்.

இதேநேரம், மேற்கத்தேய உதவி குழுக்களும் காசாவில் இஸ்ரேலின் நடவடிக்கைகளை விமர்சித்துள்ளன.

கடந்த ஒக்ரோபர் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தினர். இதில், 1200 பேர் கொல்லப்பட்டனர். 253 பணயக் கைதிகள் பிடிக்கப்பட்டனர்.

இதேசமயம், இஸ்ரேல் தொடுத்த தாக்குதலில் 32 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்.

(ஐ)

# இந்தியாவுடன் வர்த்தக உறவை மீள ஆரம்பிக்க பாக். ஆர்வம்!



இஸ்லாமாபாத், மார்ச் 25

இந்தியாவுடன் வர்த்தக உறவை மீண்டும் தொடங்குவது குறித்து பாகிஸ்தான் தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறது என அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் முகமது இஷாக் தர் கூறியுள்ளார்.

கடந்த 2019ஆம் ஆண்டு காஷ்மீர் சிறப்பு சட்டத்தை இரத்து செய்த மத்திய அரசு, ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை, காஷ்மீர் மற்றும் லடாக் என இரு மாநிலங்களாக பிரித்தது. இதனையடுத்து இந்தியா உடனான வர்த்தக உறவை பாகிஸ்தான் துண்டித்தது.

இந்நிலையில், லண்டனில் நடந்த நிகழ்ச்சியில் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் முகமது இஷாக் தர் கூறுகையில், இந்தியா உடன் வர்த்தக உறவை தொடங்க வேண்டும் என்று பாகிஸ்தான் வர்த்தகர்கள் விரும்புகின்றனர். எனவே, இந்தியாவுடன் வர்த்தக உறவை மீண்டும் தொடங்குவது குறித்து தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறோம் - என்றார்.

(ஐ)

# பப்புவா நியூகினியாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

மோர்சுபி, மார்ச் 25

பப்புவா நியூ கினியாவின் வடக்கே தொலைதூர பகுதியில் நேற்று அதிகாலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

அம்புந்தி பகுதியில் இருந்து கிழக்கு-வடகிழக்கே 32 கிலோ மீற்றர் தொலைவில் ஏற்பட்ட இந்நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.9 ஆக பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலநடுக்கம் 35 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது. நிலநடுக்கத்தின் தாக்கம் அதிகம் ஏற்பட கூடிய பகுதியில் பப்புவா நியூ கினியா உள்ளது. தென்கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக் பெருங்கடலோர பகுதிக்குட்பட்ட நிலநடுக்கம் அதிகம் ஏற்பட கூடிய இடத்தில் அது அமைந்துள்ளது

கடந்த ஆண்டு ஏப்ரலில் இதுபோன்று பப்புவா நியூ கினியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டது. இது ரிக்டரில் 7.0 ஆக பதிவாகி இருந்தது. இதில் சிக்கி 7 பேர் உயிரிழந்தனர்.

(ஐ)

# ரபா மீது தாக்குதல் நடத்தினால் இஸ்ரேல் தனிமைப்படும் அபாயம்!

**அமெரிக்கா எச்சரிக்கை**

ஜெருசலேம், மார்ச் 25

ரபா நகரம்மீது இஸ்ரேல் தாக்குதலை நடத்தினால் உலக நாடுகளிலிருந்து தனிமைப்படுத்தும் அபாயம் உள்ளது என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

காசாமீது தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல் ரபா நகரத்தின் மீது தாக்குதலை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது. இதுவே ஹமாஸுக்கு எதிரான இலக்கை முழுமையடையச் செய்யும் என்று இஸ்ரேல் கருதுகின்றது.

இந்த நிலையில், காசாவில் அமைதி ஏற்படுத்தும் நோக்கில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பயணம் சென்றார் அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் அன்ரனி பிளிங்கன், இஸ்ரேலுக்கு சென்று பிரதமர் நெதன்யாகுவை சந்தித்த அவர், "ரஃபா மீது தாக்குதல் நடத்துவது என்பது அதிக மக்களை கொல்லும்



அபாயம். இது மனிதாபிமான உதவிகளை வழங்குவதில் பெரும் அழிவை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது. இது இஸ்ரேலை உலக நாடுகளில் இருந்து தனிமைப்படுத்தும் அபாயம் கொண்டது. மேலும் அதன் நீண்ட கால பாதுகாப்பு மற்றும் நிலைப்பாட்டை பாதிக்கும்" என்று கூறியுள்ளார்.

முன்னதாக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, "ரபா மீது தாக்குதல் நடத்தும் திட்டத்துக்கு அமெரிக்கா தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்தால், இஸ்ரேல் தனியாக செல்லும்" எனக் கூறியிருந்தார்.

# பிரிட்டன் இளவரசிக்கு புற்றுநோய் பாதிப்பு!

லண்டன், மார்ச் 25

பிரிட்டன் இளவரசி கேற் மிடில்டன் புற்று நோய் பாதிப்பு காரணமாக கீமோதெரபி சிகிச்சை பெற்று வருகிறார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

பிரிட்டனின் இளவரசர் வில்லியம்ஸின் மனைவி கேற் மிடில்டன். இவருக்கு கடந்த ஜனவரியில் அங்குள்ள மருத்துவமனையில் வயிற்றில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, புற்றுநோய் பாதிப்பு கண்டறியப்பட்டது. இது தொடர்பாக, பி.பி.சி., செய்தி நிறுவனம் வெளியிட்ட காணொலியில் இளவரசி கேற் மிடில்டன் கூறியிருப்பதாவது:



வயிற்று வலிக்காக சத்திர சிகிச்சை மேற்கொண்டபோது, எனக்கு புற்றுநோய் பாதிப்பு கண்டறியப்பட்டது. இதையடுத்து, எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் குழு, கீமோதெரபி எனப்படும் கதிரியிக்க சிகிச்சை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினர். இப்போது ஆரம்ப கட்ட சிகிச்சை பெற்று வருகிறேன்.

எங்கள் குடும்பத்தின் நலன் கருதி நாங்கள் இது குறித்த விவரங்களை வெளிப்படையாக தெரிவிக்காமல் இருந்தோம். நோய் பாதிப்பு குறித்த தகவல் எனக்கும், வில்லியம்ஸுக்கும் அதிர்ச்சி அளித்தது. அந்த அறுவை சிகிச்சைக்கு பின் அதில் இருந்து மீண்டு வர எனக்கு நேரம் எடுத்தது. அதன் பிறகே இந்த சிகிச்சையை தொடங்க முடிந்தது. எங்களது பிள்ளைகளிடம் இதை அவர்களுக்கு புரியும் வகையில் எடுத்து சொல்லியுள்ளோம். தற்போது, நான் நலமுடன் உள்ளேன் - என்று கூறியுள்ளார்.

(ஐ)

# மொஸ்கோ தாக்குதல் பதினொருவர் கைது!

மொஸ்கோ, மார்ச் 25

ரஷ்ய தலைநகரில் பயங்கவரவாதத் தாக்குதலை நடத்திய நால்வர் உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் இசை நிகழ்ச்சியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 150 பேர் உயிரிழந்தனர். 140இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த தாக்குதலுக்கு ஐ. எஸ். ஐ. எஸ். -கே என்ற பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றது.

தாக்குதல் நடத்தியவர்கள் அரங்கில் இருந்து வெளியேறி வெள்ளை நிற சொகுசு காரில் தப்பிச் சென்றபோது, அவர்களை விரட்டிச் சென்ற பொலிஸார் நால்வரையும் கைது செய்தனர்.

மேலும் அவர்களுடன் தொடர்புடைய 7 பேரை கைது செய்தனர்.

தாக்குதல் நடத்தியவர்களுக்கு உக்ரைனில் சில தொடர்புகள் இருந்துள்ளன. அவர்கள் ரஷ்யாவின் எல்லையை கடந்து உக்ரைனுக்குள் தப்பிச் செல்ல முயன்றனர் என்றும் ரஷ்ய பாதுகாப்பு அமைப்பான எவ். எஸ். பி. தெரி




வித்துள்ளது. இருப்பினும் இந்த தாக்குதலுக்கும் உக்ரைனுக்கும் எந்த தொடர்பும் இல்லை - என்று ஜனாதிபதி மாளிகை அறிவித்துள்ளது.

(ஐ)

# காலநிலை மாற்றப் பாதிப்பு முதல் 10 நாடுகளில் இலங்கை

கொழும்பு, மார்ச் 25

**உலகலாவிய ரீதியில் காலநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்படும் 10 நாடுகளில் இலங்கையும் உள்ளடங்குகிறது என்று காலநிலை தொடர்பான பாராளுமன்ற குழுவின் தலைவர் எரான் விக்கிரமரத்ன, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜயவர்த்தன ஆகியோர் இந்த தகவலை வெளியிட்டுள்ளனர்.**

காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை குறைப்பதற்கு காலநிலை தொடர்பான பாராளுமன்ற குழு உள்ளூர் அமைப்புகளுடனும் ஏனைய நாடுகளுடனும் இணைந்து செயல்படும் என பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார் .

2050 ஆம் ஆண்டளவில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் காலநிலை மாற்றம் ஒரு சதவீத இழப்பை ஏற்படுத்தும் மேலும் காலநிலை மாற்றத்தால் நாட்டின் விவசாயத் துறை பல நூறு கோடி டொலர்களை இழக்க நேரிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## முதியவர்களில் 12 வீதத்தினருக்கு அனைத்துப் பற்களும் இல்லை!



கொழும்பு, மார்ச் 25

நாட்டில் 12 வீதமான முதியோர் பற்கள் அனைத்தையும் இழந்துள்ளனர். எனவே பல் ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தை பாடசாலை மட்டத்தில் கற்பிக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சர் மருத்துவர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

உலக வாய் சுகாதார தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் உரையாற்றிய அமைச்சர், வாழ்நாள் முழுவதும் பல் ஆரோக்கியத்தை சரியாக பேணுவது முக்கியம் என்றார். நாட்டில் இன்று ஏராளமானோர் வாய் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

இதுபோன்ற நோய்களைத் தடுக்க சரியான சுகாதாரப் பழக்கங்களை பின்பற்றுவதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். (ஐ)

# யாசகம் கேட்கும் சிறார் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 25

கதிர்காமம் புனித பூமியில் யாசகம் கேட்கும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுத்த போதிலும் அவர்களது பெற்றோர்கள் தமது பிள்ளைகளை மீண்டும் யாசகத்தில் ஈடுபடுத்தியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக தடுப்பு பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கதிர்காமம், செல்ல கதிர்காமம், கிரி விகாரை ஆகிய பகுதிகளில் இந்த சிறுவர்கள் தனியாகவும் பெற்றோருடனும் யாசகத்தில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகிறது. 5, 10, 16 வயதுக்குட்பட்ட பல சிறுவர்கள் பெற்றோருக்குத் தெரிந்தே யாசகத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலான சிறுவர்கள் பாடசாலைக்கு செல்வதில்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சிறுவர்கள் பல தடவைகள் திஸ்ஸமஹாராம நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சில சிறுவர்கள் பூசை தட்டுக்களை விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (ஐ)

# மேல் மாகாணத்திலேயே காச நோய் பரவல் அதிகம்!

கொழும்பு, மார்ச் 25

நாட்டில் வேகமாக காசநோய் பரவி வருகிறது. கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் அதிகளவானோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மார்புநோய்களுக்கான சிகிச்சை பிரிவின் கொழும்பு மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி மருத்துவர் ஆர். எம். சரத் பண்டார தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

காச நோய் என்பது ஒரு வகை பற்றீரியா நோய்க்கிருமிகளால் ஏற்படும் ஒரு நோயாகும். இந்த நோய் வேகமாக பரவக் கூடிய ஒரு தொற்று நோயாகும். உமிழ் நீர், சளி மூலமாக பரவக்கூடிய இந்நோய் தற்போது நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் வேகமாக பரவி வருகிறது.

இருப்பினும் மேல் மாகாணத்தில் கொழும்பு , கம்பஹா, களுத்துறை மாவட்டங்களிலேயே அதிகளவான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் மட்டக்குளி, மோதரை, மாளிகாவத்தை, தெமட்டகொடை, பொரளை, வனாத்தமுல்லை உள்ளிட்ட பிரதேசங்களிலேயே அதிகளவான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நோய் வேகமாக பரவக்கூடியது என்பதால் வீட்டில் உள்ள ஒருவர் பாதிக்கப்பட்டாலும் முழுக் குடும்ப உறுப்பினர்களையும் பரிசோதிப்பது மிகவும் அவசியம். 2 வாரங்களுக்கு மேல் தொடரும் இருமல், உணவில் நாட்டமின்மை, உடல் எடை குறைதல் , சளியுடன் இரத்தம் வெளியேறுதல் உள்ளிட்ட அறிகுறிகள் தோன்றினால் உடனடியாக மருத்துவரை நாடி பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

மருத்துவ ஆலோசனைகளின் கீழ் தொடர்ந்து 6 மாதங்களுக்கு தீவிர சிகிச்சை பெற்றால் இந்த நோயை குணப்படுத்த முடியும். இந்த நோயானது பாதிப்பு தன்மை அற்றது என்பதுடன் இந்த நோய் அறிகுறிகளை விரைவில் அறிந்து கொண்டால் இதனை குணப்படுத்துவது மிகவும் எளிது. ஆனால், இந்த நோய் அறிகுறிகளை அறிந்து கொள்ள தாமதமானால் இதனை குணப்படுத்துவது சிரமமாகலாம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# நிர்வாக அதிகாரிகளுக்கு ரூ.100,000 சம்பளம் வழங்குக

### அரசாங்கத்திடம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 25

மத்திய வங்கி அதிகாரிகளின் சம்பள அதிகரிப்புடன், அரச சேவையின் நிறைவேற்று தர உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் ஒரு இலட்சம் ரூபாய் கொடுப்பனவை வழங்குமாறு இலங்கை நிர்வாக சேவைகள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

முழு பொது சேவையிலும் 13 ஆயிரம் நிர்வாக தர அதிகாரிகள் உள்ளனர். முன்னதாக கடந்த 2019 ஒக்ரோபர் முதலாம் திகதி, அந்த அதிகாரிகளுக்கு 15 ஆயிரம் ரூபாய் விசேட மாதாந்த கொடுப்பனவை வழங்குவதற்கு பொது நிர்வாக அமைச்சு அமைச்சரவைக்கு அனுமதி வழங்கியிருந்தது.

இதன்படி, 2020 ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கை வெளியிட்ட போதிலும், அரசிடம் பணம் இல்லை எனக் கூறி அது இரத்து செய்யப்பட்டது.

இந்த நிலையில், மத்திய வங்கி அதிகாரிகளின் சம்பளத்தை உயர் பெறுமதியால் அதிகரிக்க முடியுமானால் அரச ஊழியர்களின் சம்பளத்தை மாத்திரம் ஏன் அதிகரிக்க முடியாது என இலங்கை நிர்வாக சேவைகள் சங்கம் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பியுள்ளது.

எனவே, முதலாவது கோரிக்கையாக, அனைத்து அரச ஊழியர்களின் சம்பளத்தையும் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப அதிகரிக்க வேண்டும். இரண்டாவது கோரிக்கையாக, நிர்வாக தர அதிகாரிகளுக்கு மாதாந்தம் ஒரு இலட்சம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்றும் தொழிற்சங்கம் கோரியுள்ளது.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தாவிடின் எதிர்வரும் வாரத்தில் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அந்த சங்கம் எச்சரித்துள்ளது. (ஐ)

## நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கு தேசிய மக்கள் சக்தியாலேயே முடியும்!



கொழும்பு, மார்ச் 25

எதிர்பார்க்கப்படும் சமூக மாற்றத்தை ஏற்படுத்தவும், திவாலான பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் அமைக்க வேண்டும் என்று பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா நேற்று தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்தில் நடந்த தேசிய மக்கள் சக்தியின் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாங்கள் ஏற்கனவே வெற்றி பெற்றுவிட்டோம். ஆனால், எதிர்பார்க்கப்படும் சமூக மாற்றத்தை ஏற்படுத்த 113 ஆசனங்களுடன் ஆட்சி அமைப்பதில் எந்தப் பயனும் இல்லை என்று நாங்கள் நினைக்கிறோம். எதை வேண்டுமானாலும் செய்ய உறுதியான பலம் இருக்க வேண்டும். முந்தைய அரசாங்கங்கள் நாட்டை அழிக்கப் பலத்தைப் பெற்றன. ஆனால். திவாலான நாட்டை மீட்டெடுக்க நாம் வலுவான சக்தியைப் பெற வேண்டும்," என்று அவர் கூறினார்.

நாசவேலைகள் மூலம் போட்டியாளர்களால் வீழ்த்த முடியாத பெரும் மக்கள் பலத்துடனும் நம்பிக்கையுடனும் இலங்கையில் முதலாவது மக்களின் அரசாங்கத்தை உருவாக்குவோம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோய் தடுப்பூசிகளுக்கு பற்றாக்குறை

கொழும்பு, மார்ச் 25

கர்ப்பப்பைவாய்ப் புற்று நோயின் அபாயத்தைக் குறைக்க பெண்களுக்கு வழங்கப்படும் தடுப்பூசிகள் பற்றாக்குறையாக இருக்கின்றன என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் ஒன்றியக் கூட்டமைப்பு கூறுகிறது.

சுமார் 8 மாதங்களாக அந்த தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது என்று அதன் தலைவர் நிபுணர் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக கடந்த வருடம் முதல் தடுப்பூசி போடும் பணி முடங்கியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் பாலித மஹிபால தெரிவிக்கையில்:-

பல மாதங்களாக இது தொடர்பான தடுப்பூசிகளுக்கு உலகளாவிய தட்டுப்பாடு நிலவுகிறது. எனினும், கொள்வனவுக்கு உத்தரவு அளிக்கப்பட்ட நிலையில், எதிர்வரும் ஏப்ரல் மாத தொடக்கத்தில் நாட்டுக்குக் கிடைக்கும் என்றும் அவர் கூறினார். ஒன்றரை வருடத்துக்கு தேவையான தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்படுகின்றது என்றும் அவர் கூறினார். (ஐ)

## மைத்திரியிடம்...

பல தரப்பினரும் வலியுறுத்தினர்.

இதைத் தொடர்ந்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் விடுத்த பணிப்புரைக்கு அமைய அவர் இன்றைய தினம் குற்றப் புலனாய்வு பிரிவுக்கு விசாரணைக்கு அழைக்கப் பட்டுள்ளார். (ஐ)

## ஜனாதிபதி...

ஜனாதிபதி பதவியில் இருந்து விரட்டியது தமிழ் - முஸ்லிம் மக்கள் தான் என்று கோட்டாபய ராஜபக்ஷ அவரின் "சதி" என்ற புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பதை ஏற்க முடியாது. அவர்கள்தான் விரட்டினார்கள்.

முதலில் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு. இதை நான் ஜனாதிபதி ரணிலிடம் கூறியிருக்கின் றேன் - என்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார் பஸில் ராஜபக்ஷ.

## தெரிந்த...

மேலும், "முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருத்தொன்றை முன்வைத்து தெரிவிக்கையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்தியவர்கள் தொடர்பில் தனக்கு உண்மை தெரியும் என தெரிவித்துள்ளார்.

இந்த வெறுக்கத்தக்க பயங்கரவாத செயலுக்குக் காரணமானவர்கள் யார் என்பதை அறியதான் நான் உட்பட 220 இலட்சம் மக்கள் காத்திருக்கும் நிலையில், இனியும் காத்திருக்காமல் உயிர் தியாகம் செய்த அப்பாவி மக்களுக்காக உண்மையை வெளிப்படுத்துமாறு வேண்டுகோள் விடுக்கிறேன்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில், வெளிப்படையான, பாரபட்சமற்ற மற்றும் உண்மையை வெளிப்படுத்தும், தேசிய - சர்வதேச விசாரணை ஊடாக உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்போம்.

இதில் தொடர்புடையவர்கள் அனை வரும் எந்த பதவி நிலைகளில் இருந்தா லும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு கூடிய தண்டனை வழங்கப்படும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## மைத்திரிபால...

உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாட்டு மக்கள் 2015 ஆம் ஆண்டு நாட்டு மக்கள் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அரசாங்கத்தை தோற்று வித்தார்கள். நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்துக்குள் மத்திய வங்கியை மோசடி செய்து, பொருளாதார பாதிப்புக்கு வித்திட்டது.

நல்லாட்சி அரசாங்கத்தின் அரச தலைவர்களின் அதிகார போட்டியால் தேசிய பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டது. தேசிய பாதுகாப்பின் பலவீனத்தை அடிப்படைவாதிகள் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டார்கள். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் நடத்தப் பட்டு 5 ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன பாரதூரமான கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்கு தலை நடத்தியவர் யார் என்பதை தான் அறிவேன், நீதிமன்றம் அழைப்பு விடுத் தால் உண்மையை பகிரங்கப்படுத்த தயார் என்று மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். இவ்விடயத்தில் நீதி மன்றத்துக்கு செல்ல கூடாது பொலி ஸுக்கு செல்ல வேண்டும் என்று மைத்தி ரிபால சிறிசேனவுக்கு கூற விரும்புகி றேன்.

பயங்கரவாதம், அரசுக்கு எதிராக செயற்பாடுகள் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தும் அதனை உரிய தரப் புக்கு அறிவிக்காமல் மறைப்பது 10 ஆண் டுகால சிறைத்தண்டனைக்குரிய குற்றமாகும். ஆகவே முன்னாள் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன வெகுவிரை வில் வெலிகடை சிறைக்கு செல்வார் - என்றார். (ஐ)

## இலங்கை...

மன்னாரிலிருந்து, இந்தியாவின் இராமேஸ்வரம் வரையில் இந்த பாலம் அமைக்கப்படவுள்ளது. வாகன போக்கு வரத்துக்கு மாத்திரமன்றி, இரு வழி புகையிரத பாதையும் அமைக்கப்பட வுள்ளது.

இதேவேளை, இலங்கை - இந்தியா உத்தேச பாலத்தின் ஊடான நில இணைப்பை மையப்படுத்தி தலைமன் னார் தொடக்கம் திருகோணமலை ஊடாக கொழும்பு வரையிலான விசேட நேரடி நெடுஞ்சாலை போக்குவரத்து கட்டமைப்பும் உருவாக்கப்படவுள்ளது. இதன் முதல் கட்டமாக தலைமன்னாரி லிருந்து திருகோணமலை துறைமுகம் வரையிலான வீதி கட்டமைப்பு உரு வாக்கப்படவுள்ளது.

இந்த பாலம் ஊடாக இரு நாட்டு பொருளாதார மேம்பாடு மற்றும் மக்கள் தொடர்புகளை வலுப்படுத்த முடியும் என்று இரு தரப்பும் நம்பிக்கை வெளி யிட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்த பாலத்தை அமைப்பதற்கான பூர்வாங்க ஆய்வு நடவடிக்கைகள் ஏற்கனவே முன் னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஐ)

## 1987...

ஜனதா விமுக்தி பெரமுன (ஜே. வி. பி - மக்கள் விடுதலை முன்னணி) மார்க்சிஸ் சிந்தனைகளை கொண்ட ஆயுதம் ஏந்திய அமைப்பாகும்.

*1987 ஏப்ரல் தொடக்கம் 1989 டிசெம்பர் வரையான காலப்பகுதியில்* ஆட்சியை பிடிப்பதற்காக இரண்டா வது முறையாக ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டது. முன்னதாக, 1971ஆம் ஆண்டிலும் கிளர்ச்சியில் ஈடுபட்டு தோல்வியடைந்தது. இந்தக் கிளர்ச்சி யின்போது 5 ஆயிரத்துக்கும் மேற்பட் டவர்களை அந்த அமைப்பு கொன்றது.

இரண்டாவது கிளர்ச்சிக் காலமான *1987 - 1989இல்* இராணுவத்தினர், பொலிஸார், பொதுமக்கள் என *60 ஆயிரத்துக்கும்* மேற்பட்டவர்களை ஜே. வி. பி. கொன்றது. இதைத் தொடர்ந்து *13 ஆயிரம் தொடக்கம் 30 ஆயிரம்* வரையான அந்த அமைப்பின் உறுப்பினர்கள் ஆதரவாளர்களை அர சாங்கம் கொன்று அந்த அமைப்பை தடை செய்திருந்தது.

இதேநேரம், *1983* தமிழ் மக்களுக்கு எதிராக தென்னிலங்கையில் கட்ட விழ்த்துவிடப்பட்ட இனக்கலவரத்தின் பின்னணியிலும் ஜே. வி. பியினர் உள்ள னர் என்ற குற்றச்சாட்டு வலுவாக உள் ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 10ஆண்டுகளில்...

பொருளாதார சீர்திருத்தங்களின் பிரதிபலன்கள் இன்னும் சில வருடங்க ளில் மக்களுக்குக் கிடைக்கும். எனவே, தங்களினதும் நாட்டினதும் எதிர்காலத் திற்கான சிறந்த வழி எதுவென்பதை நாட்டின் இளைஞர்கள் தீர்மானிக்க வேண்டும்.

சரிவடைந்த பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை நாடினோம்.

தற்போது சர்வதேச நாணய நிதியத்து டனான பேச்சுகள் வெற்றியடைந்துள்ள நிலையில், எமக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் பேச்சுகளை ஆரம்பித் துள்ளோம்.

இந்தக் கலந்துரையாடல்களின் பின்னர் எமது நாட்டின் அபிவிருத்திச் செயல்பாடுகளுக்கு அந்த நாடுகளின் உதவிகள் கிட்டும். அதனால் எல்லா பிரச்னைகளும் தீர்ந்துவிடாது.

நாம் இன்னும் இறக்குமதி சார்ந்த பொருளாதாரத்தையே கொண்டிருக்கி றோம். ஒவ்வொரு வருடத்திலும் ஏற்று மதியை விட இறக்குமதி அதிகமாக காணப்படுகிறது. அந்த இடைவெளியை சரிசெய்ய மீண்டும் கடன்களைப் பெறு கிறோம். இந்நிலை தொடர்ந்தால் இன் னும் 10 வருடங்களில் மீண்டும் பொரு ளாதார நெருக்கடிக்குள் சிக்கிவிடுவோம் - என்றார்.

# கோப் குழுவுக்கு வேறு நபர்களைப் பெயரிடுக

### *பிரதி சபாநாயகர் அறிவிப்பு*

கொழும்பு, மார்ச் 25

கோப் குழுவில் இருந்து விலகிய உறுப்பினர்களுக்கு பதிலாக வேறு உறுப் பினர்களின் பெயர்களை குறிப்பிடுமாறு அந்தந்த கட்சிகளுக்கு அறிவித்துள்ளதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் கோப் குழுவில் இருந்து விலகியமை தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து எவ்வித விடயங்களும் தெரிவிக் கப்படவில்லை.

கோப் குழுவில் இவ்வாறான சம்பவம் இடம் பெற்றமை இதுவே முதல் தடவை என பிரதி சபாநாயகர் தெரிவித்தார். இது தொடர்பில் கலந்துரையாடப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தி னார்.

கோப் குழுவில் இருந்து *11* உறுப்பி னர்கள் இராஜினாமா செய்துள்ளனர். இவர்கள், ரோகித அபேகுணவர்த்தன அந்தக் குழுவின் தலைவராக நியமிக் கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே பதவி விலகினர். (ஐ)

# நித்திரையிலிருந்தவர்மீது வாள்வெட்டுத் தாக்குதல்!



திருகோணமலை, மார்ச் 25

நித்திரையிலிருந்த இளைஞர்மீது நடத்தப்பட்ட வாள்வெட்டுத் தாக்கு தலில் அவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள் ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் திருகோணமலை - மொறவெவ பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளது.

படுகாயமடைந்தவர் நண்பர்களுடன் விருந்துக்கு சென்றுவிட்டு வீட்டுக்கு திரும்பி தனியாக உறங்கியுள்ளார். அப்போதே வீட்டுக்குள் நுழைந்தவர்கள் அவரை வெட்டியுள்ளனர்.

இதில் 27 வயதான இளைஞர் காயம டைந்தார். அங்கிருந்து தப்பிய அவர் தனது சகோதரிக்கு தெரிவித்து அவர் மூலம் மருத்துவமனையில் சேர்க்கப்பட் டார். (ஐ)

# மக் டொனல்ட்ஸ் பெயரில் இயங்கத் தடை

கொழும்பு, மார்ச் 25

மக் டொனால்ட்ஸ் வர்த்தக நாமத் தின் கீழ் கொழும்பு மற்றும் அதன் புற நகர் பகுதிகளில் இயங்கி வரும் 12 உண வகங்கள் இயங்குவதற்கு தடை விதித்து கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

அவர்களது உடன்படிக்கைகளில் ஏற்பட்ட முரண்பாடு தொடர்பில் ஆதார நிறுவனம் முறைப்பாடு செய் ததை அடுத்து இந்த தடை உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தேர்தல் பிற்போடப்படும்...

முறைமையை அமுல்படுத்தப்பட வேண் டியமை தொடர்பில் பல்வேறு தரப்பினரும் அபிப்பிராயங்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

இவற்றைக் கருத்தில் கொண்டே என்னால் பாராளுமன்றத் தேர்தல் முறைமையை மாற்றம் செய்வது தொடர்பாக இரண்டு முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ளன.

*225* பாராளுமன்ற உறுப்பினர்களில் *160* பேர் தொகுதி வாரியாகவும் ஏனைய *65* பேர் விகிதாசார முறையிலும் தெரிவு செய்யவும் அமைச்சரவையில் திருத்தம் சமர்ப்பித்துள்ளேன்.

இரண்டாவதாக 'செனட்' சபை யொன்றை அமைப்பது தொடர்பில் முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது. செனட் சபை *9* மாகாணங்களின் பிரதிநிதிகள், புத்திஜீவிகளின் அங்கத் துவத்தை கொண்டதாக அமையும்.

இந்தியா, பிரித்தானியா, உள்ளிட்ட நாடுகளில் செனட் சபை காணப்படுகின் றது. அந்த வகையில் இந்த செனட் சபையானது, பாராளுமன்றத்தை கண் காணிக்கும் செயல்பாட்டையும், அரச மைப்பு சபையின் செயல்பாட்டையும் முன்னெடுக்கும் வகையில் தொழிற்படுவ தற்கான முன்மொழிவுகள் செய்யப்பட வுள்ளன.

இந்த விடயங்கள் குறித்து அனைத் துத் தரப்பினரின் கருத்துகளை பெற பிரதமர் தலைமையில் அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த தேர்தல் முறைமை மாற்றமா னது அடுத்துவருகின்ற பாராளுமன்றத் தேர்தலை மையப்படுத்தியதல்ல. அடுத்த பாராளுமன்றத் தேர்தலுக்குள் அதனைச் செயல்படுத்த சாத்தியமற்ற நிலைமையே உள்ளது. ஆகவே, அதற் கடுத்த பாராளுமன்றத் தேர்தலில்தான் இந்த நடைமுறை சாத்தியமாகும்.

எனவே, இதனால் தேர்தல் பிற்போ டப்படும் என்று எதிரணியினர் தற்போது பிரசாரங்களை மேற்கொள் வது யதார்த்தமற்ற கற்பனைக் கதை யாகும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# சமஷ்டி தீர்வை முன்வையுங்கள் இல்லையேல் பொது வேட்பாளர்!

## இப்படி சொல்கிறார் சிறீதரன் எம். பி.



கிளிநொச்சி, மார்ச் 25

**தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய சமஷ்டி அடிப்படையிலான தீர்வை வழங்குவது குறித்து ஜனாதிபதி வேட்பாளர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவுபடுத்த வேண்டும். சாதகமான தீர்வு எதனையும் முன்வைக்காதவிடத்து தமிழர்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் எனவும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். சிறீதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை இலக்காகக் கொண்டு இப்போதே அரசியல் கட்சிகள் பிரசார பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இருப்பினும் நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் எவையும் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு குறித்து இதுவரையில் எந்தவொரு கருத்தையும் வெளியிடவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு உத்தேசித்திருக்கும் பிரதான அரசி யல் கட்சிகளின் வேட்பாளர்கள், தமிழர்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் தமது நிலைப்பாடு என்னவென்பதை தற்றுணிவுடன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவுபடுத்த வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# காணிகளை தம்வசம் வைத்திருக்கவே படையினரும் இணைந்து விவசாயம்!

## விக்னேஸ்வரன் எம். பி. சாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 25

வலி. வடக்கில் விடுவிக்கப்பட்ட தமிழ் மக்களின் விவசாய காணிகளில் மக்களுடன் படைத்தரப்பினர் இணைந்து விவசாய நடவடிக்கைகளில் பங்களிப்பு செய்வதை ஏற்க முடியாது. இது காணிகளை தொடர்ந்து இராணுவத்திடம் தக்கவைக்கச் செய்யும் முயற்சி என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விவசாயத்துக்காக காணிகளை விடுவித்தார். இது தொடர்பில் விக்னேஸ்வரன் எம். பியிடம் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் முதலமைச்சராக இருந்தபோது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க இஸ்ரேல் நாட்டைப் போன்று ராணுவம் மக்களும் இணைந்து விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் கட்டமைப்பை ஒன்றை வடக்கில் ஏற்படுத்துவோம் என அன்று என்னிடம் கேட்டிருந்தார்.

நான் அதை நிராகரித்ததுடன் வடக்கிலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அவரிடம் தெரிவித்த நிலையில் அவர் என்னுடன் பேசுவதை நிறுத்தி விட்டார்.

தற்போது ஜனாதிபதியாக வந்த நிலையில் வலி வடக்கில் ஒரு பகுதி மக்களின் விவசாய காணிகளை விடுவித்துவிட்டு விவசாய நடவடிக்கையில் இராணுவத்தை ஈடுபட வைப்பது என்பது தொடர்ந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இராணுவ இருப்பைத் தக்கவைக்கும் செயல்பாடாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தை ஏற்க முடியாது விடுவிக்கப்பட்ட மக்களின் காணிகளில் மக்கள் சுதந்திரமாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் உதவி என்ற போர்வையில் தொடரவுள்ள ஆக்கிரமிப்பை ஏற்க முடியாது - என்றார். (ஐ)

# ஒரேநேரத்தில் ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தல்கள்!

## சபாநாயகர் மகிந்த ஆலோசனை

கொழும்பு, மார்ச் 25

ஜனாதிபதித் தேர்தல் பாராளுமன்றத் தேர்தல் ஆகிய இரண்டையும் ஒரே நேரத்தில் நடத்துமாறு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இவ்வாறு இரண்டையும் ஒன்றாக நடத்துவதால் செலவை மீதப்படுத்த முடியும் என்று கூறிய சபாநாயகர், இரண்டு தேர்தல்களையும் தனித்தனியே நடத்தினால் அதிக பணம் செலவாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

நாடு இப்போது இருக்கின்ற நிலையில் இரண்டையும் ஒன்றாக நடத்துவதே சிறந்தது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ஐ)

# இன்று சந்திரகிரகணம்!

கொழும்பு, மார்ச் 25

2024 ஆம் ஆண்டின் முதலாவது சந்திரகிரகணம் இன்று திங்கட்கிழமை நிகழவுள்ளது.

இன்றைய தினமும் பங்குனி உத்தரமும் நீடிக்கிறது. பங்குனி உத்தர தினத்தன்று சந்திர கிரகணம் 100 ஆண்டுகளுக்கு பின் வருகிறது.

மேலும் சூரியன், சந்திரன் மற்றும் பூமி ஆகிய மூன்றும் ஒரே நேர் கோட்டில் வரும்போது கிரகணம் ஏற்படுகிறது.

சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமி வரும் நிலையில், சூரியனின் நேரடி கதிர்கள் சந்திரனை ஒளிரவிடாமல் தடுக்கும் போது சந்திர கிரகணம் ஏற்படுகிறது.

இன்று வரும் சந்திர கிரகணம் இந்த ஆண்டின் முதல் சந்திர கிரகணம் ஆகும். இந்த சந்திர கிரகண நிகழ்வானது காலை 10:23 மணிக்கு தொடங்கி மாலை 4:39 மணிக்கு முடிவடைகிறது.

பொதுவாக கிரகணத்தின் போது பல்வேறு விஷயங்கள் கடைப்பிடிக்கப்படும். நம் முன்னோர் காலம் முதல் அது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

கருவுற்ற பெண்கள் சந்திர கிரகணத்தை பார்க்கக்கூடாது. கதிர் வீச்சுக்கள் உடல் மற்றும் மன ரீதியாக தாக்கத்தை ஏற்படுத்தும் என அறிவியல் ரீதியாக கூறப்படுகிறது.

ஆன்மீக காரணமும் உள்ளது. கிரகணத்தின் போது வெளிப்படும் கதிர்வீச்சு காரணமாக வயிற்றில் இருக்கும் கருவுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படும் என்பதால் வெளியே செல்லக்கூடாது என பெரியவர்கள் கூறுகின்றனர். (ஐ)

# தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் இன்று குடமுழுக்கு!



யாழ்ப்பாணம், மார்ச் 25

பிரசித்தி பெற்ற தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய குடமுழுக்கு பெருவிழா (கும்பாபிஷேகம்) இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6.00 மணி தொடக்கம் 7.10 மணி வரை இராஜகோபுர திருக்குடமுழுக்கு, காலை 9.25 மணி தொடக்கம் 10.33 மணி வரை மூலாலய திருக்குடமுழுக்கும் நடைபெறவுள்ளன.

இதேவேளை, நேற்று மதியம் வரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் திருக்குடமுழுக்கு ஆரம்ப கிரியைகளும் நடைபெற்றன. (ஐ)

# சட்டவிரோத மணல் அகழ்வு 6 டிராக்டர்களுடன் 6 பேர் கைது!

வடமராட்சி, மார்ச் 25

வடமராட்சி கிழக்கு - அம்பன் பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஆறு உழவு இயந்திரங்களை மருதங்கேணி பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றினர். அத்துடன், 6 பேரையும் கைது செய்தனர்.

நேற்றைய தினம் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் உழவு இயந்திரங்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஐ-02)

# வெள்ளவத்தையில் பிரபல ஆடையகத்தில் தீ விபத்து






கொழும்பு, மார்ச் 25

கொழும்பு - வெள்ளவத்தையில் பிரபல ஆடையகத்தின் கட்டடத்தில் பெரும் தீ பரவல் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்டது.

தீயை அணைக்கும் பணியில் 6 தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டன.

இந்தத் தீ விபத்தால் அந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்தது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு



# ரஸல் அதிரடி ஆட்டம் கொல்கத்தா வெற்றி!



கொல்கத்தா, மார்ச் 25

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி வீழ்த்தியது. இந்த போட்டியில் 25 பந்துகளில் 64 ஓட்டங்கள் விளாசிய அந்த்ரே ரஸல் ஆட்ட நாயகனாக தெரிவானார்.

கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற சன்ரைசர்ஸ் அணி பந்து வீச்சு தெரிவு செய்தது. கொல்கத்தா அணியின் தொடக்க ஆட்டக்காரரான பில் சால்ட், 40 பந்துகளில் 54 ஓட்டங்கள் எடுத்து அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

எனினும் சுனில் நரேன், வெங்கடேஷ் ஐயர், ஸ்ரேயஸ் ஐயர், நிதிஷ் ராணா என அடுத்தடுத்து விக்கெட்கள் விழுந்தன. நடராஜன் மூன்று விக்கெட்களை வீழ்த்தினார். எட்டாவதாக களமிறங்கிய அந்த்ரே ரஸல் தனது அதிரடியால் ஆட்டத்தின் போக்கை மாற்றினார்.

மூன்று பௌண்ட்ரிகள் மற்றும் ஏழு சிக்ஸர்கள் என அபாரமாக ஆடி 25 பந்துகளில் 64 ஓட்டங்களை குவித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார் ரஸல். இதன் மூலம் இதன் மூலம் இந்த ஐ. பி. எல். தொடரில் 200 ஓட்டங்களை எடுத்த முதல் அணி என்ற பெருமையை கொல்கத்தா நைற் ரைடர்ஸ் பெற்றது.

இறுதியாக 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு கொல்கத்தா அணி 207 ஓட்டங்களை எடுத்திருந்தது. அடுத்து 208 ஓட்டங்கள் என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் அணியின் தொடக்க வீரர்களாக மயங்க் அகர்வால் மற்றும் அபிஷேக் சர்மா இருவரும் தலா 32 ஓட்டங்கள் என நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

அடுத்தடுத்து இறங்கிய ராகுல் திரிபாதி 20 ஓட்டங்களும் அய்டன் மார்க்ரம் 18 ஓட்டங்களும் எடுத்த நிலையில், அடுத்து இறங்கிய ஹென்றிச் 29 பந்துகளுக்கு 63 ஓட்டங்கள் எடுத்து அணிக்கு வலு சேர்த்தார். ஹென்றிச் அடித்த சிக்ஸர்கள் மட்டுமே 8.

கடைசி 2 பந்துகளில் 5 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில், ஐந்தாவது பந்தில் அவர் சிக்ஸர் அடிக்க முயன்று ஆட்டமிழந்தார் கிளாசன். இதனால் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி யிடம் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. 25 பந்துகளில் 64 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்த கொல்கத்தா அணி வீரர் அந்த்ரே ரஸல் ஆட்ட நாயகனாக தெரிவானார். (ஐ)

# டில்லி கப்பிட்டல்ஸை வீழ்த்தியது பஞ்சாப்!

முலான்பூர், மார்ச் 25


ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட் தொடரில் டில்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் சாம் கரணின் அதிரடி துடுப்பாட்டத்தால் பஞ்சாப் கிங்ஸ் அணி 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பஞ்சாப் மாநிலம் முலான்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி கேபிடல்ஸ் 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 174 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக ஷாய் ஹோப் 25 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 33 ஓட்டங்களும், இம்பக்ட் பிளேயர் விதியின் கீழ் களமிறங்கிய இஷான் போரெல் 10 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகளுடன் 32 ஓட்டங்களும் சேர்த்தனர்.

தொடக்க வீரர்களான டேவிட் வோர்ணர் 29, மிட்செல் மார்ஷ் 20 ஓட்டங்களில் வெளியேறினர். 14 மாதங்களுக்குப் பிறகு களத்துக்கு திரும்பிய அணித் தலைவர் ரிஷப் பந்த் 13 பந்துகளில் 18 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார்.

அக்சர் பட்டேல் 21 ஓட்டங்களில் ரன் அவுட் ஆனார். பஞ்சாப் அணி தரப்பில் அர்ஷ்தீப் சிங், ஹர்ஷால் பட்டேல் ஆகியோர் தலா 2 விக்கெட் கைப்பற்றினர்.


174 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய



பஞ்சாப் கிங்ஸ் அணியானது சாம் கரனின், லியாம் லிவிங்ஸ்ரன் ஆகியோரின் அதிரடியால் 19.2 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 177 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

சாம் கரன் 47 பந்துகளில், ஒரு சிக்ஸர், 6 பௌண்ட்ரிகளுடன் 63 ஓட்டங்கள் விளாசினார். லியாம் லிவிங்ஸ்ரன் 21 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 38 ஓட்டங்கள் சேர்த்தார். முன்னதாக அணித்தலைவர் ஷிகர் தவான் 22, ஜொன்னி பெயர்ஸ்ரோ 9, பிரப்சிம்ரன் சிங் 26, ஜிதேஷ் சர்மா 9 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். ஆட்ட நாயகனாக சாம் கரன் தெரிவானார். (ஐ)

# மியாமி ரென்னிஸ்; சபலெங்கா தோல்வி!



மியாமி, மார்ச் 25

மியாமி ஓப்பன் ரென்னிஸில் சபலெங்கா அதிர்ச்சி தோல்வியடைந்துள்ளார்.

அமெரிக்காவின் புளோரிடாவின் மியாமி நகரில் 1000 தரவரிசை புள்ளிகளை கொண்ட மியாமி ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது.

இதில், மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் பெலாரஸ் வீராங்கனை அரினா சபலெங்கா உக்ரைனின் அன்ஹெலினா கலினினா உடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் முதல் செற்றை 4-6 என்ற புள்ளி கணக்கில் இழந்த சபலெங்கா அடுத்த செற்றை 6-1 என்ற கணக்கில் கைப்பற்றினார். இதையடுத்து 3ஆவது செற்றை கைப்பற்றி அடுத்த சுற்றுக்கு முன்னேறுவார் என எதிர்பார்க்கப்பட்ட சபலெங்கா 1-6 என்ற புள்ளிக்கணக்கில் இழந்து அதிர்ச்சி தோல்வி கண்டு வெளியேறினார். (ஐ)



# பங்களாதேஷுடனான டெஸ்ட் இலங்கை வலுவான நிலையில்!

சில்ஹெட், மார்ச் 25

பங்களாதேஷுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் 464 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி வலுவான நிலையில் உள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது.

இதன்படி முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை 280 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. தனஞ்சய டி சில்வா, கமிந்து மெண்டிஸ் இருவரும் சதம் அடித்தனர்.

இதையடுத்து முதல் இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் இலங்கை அணியின் அபார பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 188 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

அந்த அணியில் அதிகபட்சமாக தைஜுல் இஸ்லாம் 47 ஓட்டங்கள் அடித்தார். இலங்கை தரப்பில் விஷ்வ பெர்னண்டோ 4 விக்கெட்களும், கசூன் ராஜித, லஹிரு குமாரா ஆகியோர் தலா 3 விக்கெட்கள் வீழ்த்தி அசத்தினர்.

இதையடுத்து 92 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி நேற்றுமுன்தினம் 2ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட்களை இழந்து 119 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இந்நிலையில் 3ஆம் நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 110.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 418 ஓட்டங்களை குவித்தது. இலங்கை தரப்பில் சிறப்பாக ஆடிய கமிந்து மெண்டிஸ் 164 ஓட்டங் களும் தனஞ்சய டி சில்வா 108 ஓட்டங்களும் எடுத்தனர்.

பங்களாதேஷ் தரப்பில் மெஹதி ஹசன் மிராஸ் 4 விக்கெட்கள் வீழ்த்தினார். இதையடுத்து 511 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பங்களாதேஷ் அணி தனது 2ஆவது இன்னிங்ஸை ஆடியது. பங்களாதேஷ் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக மஹ்முதுல் ஹசன் ஜாய் மற்றும் சகிர் ஹசன் களம் இறங்கினர்.

இதில் மஹ்முதுல் ஹசன் ஜோய் 0 ரன், சகிர் ஹசன் 19 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். இதையடுத்து களம் இறங்கிய நஜ்முல் ஹொசைன் சாண்டோ 6 ஓட்டங்கள் ஷதத் ஹொசைன் திபு 0, லிற்றன் தாஸ் 0 எடுத்து அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதியில் 3ம் நாள் ஆட்ட நேர முடிவில் வங்காளதேசம் 47 ரன்னுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறி வருகிறது. வங்காளதேசம் தரப்பில் மொமினுல் ஹக் 7 ஓட்டங்களுடனும், தைஜுல் இஸ்லாம் 6 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இலங்கை தரப்பில் விஷ்வ பெர்னாண்டோ 3 விக்கெட்கள் வீழ்த்தினார். பங்களாதேஷின் வெற்றிக்கு இன்னும் 464 ஓட்டங்கள் தேவைப்படுகின்றன.

இதேவேளையில் இலங்கையின் வெற்றிக்கு இன்னும் 5 விக்கெட்களே தேவைப்படுவதால் இந்த ஆட்டத்தில் இலங்கையின் வெற்றி பெறுவது கிட்டத்தட்ட உறுதியாகி விட்டது.

# ரஷ்யா: மொஸ்கோ இசை நிகழ்ச்சி தாக்குதலில் 150 பேர் பலி, 11 பேர் கைது: முன்பே எச்சரித்த அமெரிக்கா!

மாஸ்கோவின் எல்லையில் உள்ள இசை நிகழ்ச்சி அரங்கு ஒன்றில் புகுந்த துப்பாக்கி ஏந்திய நபர்கள் நடத்திய தாக்குதலில், குறைந்தது 150 பேர் கொல்லப்பட்டதாகவும், 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் ரஷ்ய பாதுகாப்பு சேவை தெரிவித்துள்ளது. இந்த சம்பவத்தில் தொடர்புடைய 4 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிபிசி சரிபார்த்த வீடியோ காட்சிகளின்படி, வடமேற்கு புறநகர் கிராஸ்னோகோர்ஸ்கில், குறைந்தது நான்கு பேர் உடல் முழுவதும் மறைத்தவாறு உடை அணிந்துகொண்டு இந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

குரோகஸ் சிட்டி ஹால் வளாகத்தில் இசை நிகழ்ச்சி ஒன்று நடக்கவிருந்தது. அப்போது அரங்கிற்குள் நுழைந்த துப்பாக்கி ஏந்திய நபர்கள் அங்கிருந்தவர்கள் மீது தீவிரமான தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் கட்டடத்தின் பெரும்பகுதி தீயில் எரிந்தது மட்டுமின்றி, மேற்கூரையின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது.

இதில் பலியானவர்களில் குழந்தைகளும் இருப்பதாகக் கூறப்படுகிறது. மேலும் ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் இந்த 'பயங்கரவாத தாக்குதலை" கடுமையாக கண்டனம் செய்துள்ளது.

இணையத்தில் பரவிவரும் சரிபார்க்கப்படாத அறிக்கையின்படி, இந்தத் தாக்குதலுக்குப் பின்னால் ஐஎஸ் தீவிரவாதக் குழு இருப்பதாகக் கூறப்படுகிறது.




### தாக்குதல் குறித்து முன்பே எச்சரித்த அமெரிக்கா

இதுகுறித்து அமெிக்க சிபிஎஸ் செய்தி முகமையிடம் பேசியுள்ள அமெரிக்க அதிகாரிகள், ஐஎஸ் அமைப்பு ரஷ்யாவை தாக்க உள்ளது என உளவுத் தகவல் கிடைத்ததாகக் கூறினர்.

மேலும், மாஸ்கோவில் 'பெரிய கூட்டங்களை" குறிவைத்து தாக்குதல் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக இந்த மாத தொடக்கத்தில் ரஷ்யாவை எச்சரித்ததாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

தாக்குதல் நடத்தியவர்களைப் பிடிப்பதற்காக சம்பவ இடத்தில் சிறப்புப் பிரிவுகள் செயல்பட்டு வருவதாக ரஷ்யாவின் தேசிய காவல் அமைப்பு தெரிவித்துள்ளது. ரஷ்ய உயர் அதிகாரிகளும் கிராஸ்னோகோர்ஸ்க்கு சென்றுள்ளனர்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு, "தீவிரவாதிகள் மாஸ்கோவில் பெரிய கூட்டங்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தும் திட்டங்களைக் கொண்டுள்ளனர்," என்ற தகவல் குறித்து கண்காணித்து வருவதாகவும், அங்குள்ள அமெரிக்க குடிமக்கள் பெரிய கூட்டங்களைத் தவிர்க்குமாறும் அமெரிக்க தூதரகம் எச்சரிக்கை செய்தது.

பின்னர் வெள்ளிக்கிழமை மாலை தனது அறிவிப்பைப் புதுப்பித்து வெளியிட்ட அமெரிக்கா, தாக்குதல் நடந்த இடத்திற்கு அருகில் இருப்பதைத் தவிர்க்குமாறு தனது குடிமக்களை வலியுறுத்தியுள்ளது.

குரோகஸ் சிட்டி ஹால் வளாகத்தில் நடக்கவிருந்த இசை நிகழ்ச்சிக்காக 6,000க்கும் மேற்பட்ட ரஷ்யர்கள் குவிந்தனர். இந்நிலையில் இசைக்குழு மேடைக்கு வருவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு இந்தத் தாக்குதல் சம்பவம் நடைபெற்றதாக சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் கூறியுள்ளார். அதேநேரம் இசைக்குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் யாருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை.

இதுகுறித்து தற்போது வரை ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதின் நேரடியாக மக்களிடம் பேசவில்லை. ஆனால், அவரது அலுவலகத்தைச் சேர்ந்த மற்றுமொரு அதிகாரி, பாதிக்கப்பட்ட மக்கள் விரைந்து நலம்பெறத் தனது ஆறுதல்களைத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தின் போது நுழைவு வாயில் ஒன்றில் பணியில் இருந்த காவலர் ஒருவர், எப்படி இந்த வன்முறை கும்பல் ஆயுதங்களோடு அரங்கிற்குள் நுழைந்தது என்பது குறித்து விரிவாக விளக்கம் அளித்துள்ளார்.

"அங்கு மூன்று பாதுகாவலர்கள் இருந்தனர். தாக்குதல் மேற்கொண்டவர்களைப் பார்த்தவுடன் அவர்கள் ஒரு விளம்பரப் பலகையின் பின்னால் ஒளிந்து கொண்டனர்," என்று அவர் ரஷ்ய டெலிகிராம் சேனலான பாசா



விடம் கூறியுள்ளார்.

மேலும் 'தாக்குதல் மேற்கொண்ட அந்த நபர்கள் எங்களிடமிருந்து 10 மீ (30 அடி) தொலைவில் நின்றுகொண்டு, தரைத் தளத்தில் இருந்தவர்களை நோக்கி கண்முன் தெரியாமல் சுடத் தொடங்கினர்," என்று தெரிவித்துள்ளார் அவர்.

அரங்கின் உள்ளே இருந்த பெண் ஒருவர், தானும் மற்ற பார்வையாளர்களும் துப்பாக்கிச் சூடு நடத்தப்படுவதை உணர்ந்தவுடன், மேடையை நோக்கி ஓடியதாக ரஷ்ய தொலைக்காட்சியிடம் தெரிவித்துள்ளார்.


"அங்கிருந்த ஸ்டாலில் ஒரு நபரை ஆயுதத்துடன் பார்த்தேன். அங்கு துப்பாக்கிச் சூடு நடந்தது. நான் ஒலிபெருக்கியின் பின்னால் மறைந்தவாறு செல்ல முயன்றேன்," என்று அவர் கூறியுள்ளார்.

கட்டடத்தின் இரண்டு மேல்தளங்களில் இருந்த கண்ணாடிகள் உடைந்து நொறுங்கின. இதனால் முகப்புப் பகுதி தீயில் சிக்கிக்கொண்டது. இதன் விளைவாக எழுந்த புகை வானத்தில் பரவத் தொடங்கியது.

தாக்குதல் நடத்தியவர்கள் வீசிய ஒருவகை நெருப்பு உண்டாக்கும் கருவியின் விளைவாகவே தீ பற்றியதாகத் தெரிய வந்துள்ளது.

இசைநிகழ்ச்சி அரங்கில் பால்கனியில் இருந்த விட்டலி தாக்குதல் நடத்தியவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்துவதைப் பார்த்துள்ளார். இதுகுறித்து விவரித்த அவர், "அவர்கள் சில பெட்ரோல் குண்டுகளை வீசினர், அனைத்தும் எரிய ஆரம்பித்தன. நாங்கள் வெளியேறும் வழியை நோக்கி ஓடத் தொடங்கினோம்," என்றார்.

தாக்குதலின்போது, அந்த வளாகத்தில் நடைபெற்ற பால்ரூம் நடனப் போட்டியில் பங்கேற்பதற்காக வந்திருந்த குழந்தைகள் மற்றும் இளைஞர்களும் இருந்ததாக நேரில் கண்ட நபர் ஒருவர் தெரிவித்துள்ளார்.



அரங்கில் இருந்தவர்களில் சிலர் மேடையில் இருந்து பார்க்கிங் பகுதிக்கு தப்பிச் செல்ல முடிந்தது. மற்றவர்கள் மேல்பகுதிக்குச் சென்றனர். மேலும் 100 பேர் கட்டடத்தின் அடித்தளத்தின் வழியாக தப்பிச் சென்றதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.

டஜன் கணக்கான அவசர ஊர்திக் குழுவினர் உடனடியாக சம்பவ இடத்திற்கு அனுப்பப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தையொட்டி தலைநகரில் நடைபெற இருந்த அனைத்து பொது நிகழ்வுகளையும்



ரத்து செய்துள்ள மாஸ்கோ மேயர் செர்ஜி சோபியான், 'பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்காக நான் வருந்துகிறேன்," என்று கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து அடுத்த சில மணிநேரங்களில் ரஷ்யாவின் இரண்டாவது பெரிய நகரமான செயின்ட் பீட்டர்ஸ்பர்க் உட்பட பல பிராந்தியங்களும் நடக்கவிருந்த பொதுநிகழ்வுகளை ரத்து செய்துள்ளன.

ரஷ்ய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் மரியா ஜாகரோவா, இந்தச் சம்பவத்தை சர்வதேச சமூகம் கண்டிக்க வேண்டும் என்றும், இதுவொரு கொடூரமான குற்றம் என்றும் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா உக்ரேன் மீது இரண்டு ஆண்டுகளாக தாக்குதல் நடத்தி வரும் நிலையில், இந்தத் தாக்குதலுக்கும் தங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று உக்ரேன் கூறியுள்ளது.

"உக்ரேனுக்கு நடந்துள்ளது என்னவாகினும், அதற்கான முடிவு போர்க்களத்தில் மட்டுமே தீர்மானிக்கப்படும்" என்று உக்ரேன் அதிபரின் ஆலோசகர் மைக்கைலோ பொடோலியாக் டெலிகிராமில் தெரிவித்துள்ளார்.

ஆறு நாட்களுக்கு முன்புதான் ரஷ்ய அதிபர் தேர்தலில் விளாதிமிர் புடின் ஐந்தாவது முறையாக வெற்றி பெற்றார். இந்தத் தேர்தலில் உண்மையான எதிர்க்கட்சிகள் எதுவும் இல்லை, தேர்தல் சுதந்திரமானதோ அல்லது நியாயமானதோ அல்ல என்று மேற்கத்திய நாடுகள் கண்டனம் செய்துள்ளன.

உக்ரேனிய ராணுவ புலனாய்வு செய்தித் தொடர்பாளர் ஆண்ட்ரி யூசோவ் இந்தத் தாக்குதல் எந்த ஆதாரமும் இல்லாமல், "புடினின் சிறப்பு சேவைகளால் வேண்டுமென்றே தூண்டிவிடப்பட்ட செயல்" என்று கூறியுள்ளார்.




வெள்ளிக்கிழமை இரவு நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் மாஸ்கோவில் மக்களை நோக்கி நடத்தப்பட்ட மோசமான தாக்குதலாகும்.

இது 2002இல் தலைநகரில் நடத்தப்பட்ட தியேட்டர் தாக்குதலை நினைவுபடுத்தியுள்ளது. அந்தச் சமபவத்தில் 40 செச்சென் போராளிகள் ஒரு இசை நிகழ்ச்சியில் பங்கேற்ற 900க்கும் மேற்பட்ட மக்களை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்தனர்.

இறுதியில் அந்த தியேட்டர் அரங்கிற்குள் நுழைந்த ரஷ்ய பாதுகாப்புப் படை தூக்க வாயுவை உள்ளே செலுத்தியது. இந்தச் சம்பவத்தில் 130 பணயக் கைதிகள் இருந்தனர்.

தாக்குதலைத் தொடர்ந்து விமான நிலையங்கள் மற்றும் முக்கிய பகுதிகளில் தற்போது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி, துப்பாக்கிச் சூடு காட்சிகள் "பயங்கரமானதாகவும் பார்ப்பதற்கு கடினமாகவும் இருந்தன" என்று தெரிவித்துள்ளார்.

மேலும் 'இந்தத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் பக்கமே எங்களது சிந்தனை இருக்கும்," என்று அவர் கூறியுள்ளார்.

# ராஜபக்ஷவை விரட்டியடித்தது யார்? தமிழர்கள், வெளிநாட்டு சக்தி பற்றி அவர் கூறுவது என்ன?

ரஞ்சன் அருண் பிரசாத்



‘ஜனாதிபதி பதவியிலிருந்து என்னை வெளியேற்றிய சூழ்ச்சி’ என்ற பெயரில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ புத்தகமொன்றை அண்மையில் வெளியிட்டிருந்தார்.

இந்த புத்தகத்தின் ஊடாக கோட்டாபய ராஜபக்ஸ, பௌத்த மேலாதிக்கத்தை நியாயப்படுத்தி, ஏனைய மதத்தவர்களை சூழ்ச்சிக்குள் உள்ளடக்கும் வகையில் இந்த புத்தகத்தை எழுதியிருப்பதாக கூறப்படுகின்றது.

இந்த புத்தகத்தின் உள்ளடக்கம் குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது.

**‘ஜனாதிபதி பதவியிலிருந்து என்னை வெளியேற்றிய சூழ்ச்சி’**

‘ஜனாதிபதி பதவியிலிருந்து என்னை வெளியேற்றிய சூழ்ச்சி’ என்ற 192 பக்கங்களை கொண்ட புத்தகமொன்றை கோட்டாபய ராஜபக்ஸ அண்மையில் வெளியிட்டார்.

தான் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் காணப்பட்ட பொருளாதார நிலைமை முதல் தான் பதவியை விட்டு வெளியேற்றப்பட்ட காலம் வரையான விடயங்களை உள்ளடக்கும் வகையில் இந்த புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

பௌத்த மதத்தை தவிர்த்து, ஏனைய அனைத்து தரப்பினரும் தன்னை பதவியிலிருந்து வெளியேற்றும் சூழ்ச்சியில் உள்ளடங்கியுள்ளதாக பிரதிபலிக்கும் வகையில் இந்த புத்தகத்தின் உள்ளடக்கங்கள் காணப்படுகின்றன.

தமிழர்கள் குற்றம்சாட்டும் யுத்தக் குற்றங்கள், இஸ்லாமியர்கள் குற்றம் சாட்டும் கோவிட் மரணங்ளை அடக்கம் செய்ய நிராகரித்த விடயங்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் குற்றம் சாட்டும் ஈஸ்டர் தாக்குதல் போன்ற விடயங்களை முன்னிலைப்படுத்தி இந்த புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை ஆட்சியிலிருந்த அரசாங்கம், ஜெனீவா மனித உரிமை பேரவையின் 30-1 யோசனைக்கு அனுசரணை வழங்கியமையை கோட்டாபய ராஜபக்ஸ இந்த புத்தகத்தின் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த யோசனைக்கு இணை அனுசரணை வழங்கியமையானது, சிங்கள மக்களை இலக்காக கொண்டு செய்த ஒரு விடயம் என பலரும் உற்று நோக்கியதாக அவர் தனது புத்தகத்தின் குறிப்பிட்டுள்ளார்.

2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வெளியிடப்பட்ட ஜெனீவா அறிக்கையின் பிரகாரம், இலங்கை ராணுவம் யுத்தக் குற்றத்தில் ஈடுபட்டது என்பதை அப்போதைய அரசாங்கம் ஏற்றுக்கொண்டதாக இதில் கூறப்பட்டுள்ளது.



“இலங்கை ராணுவம் மீதான யுத்தக் குற்றங்களை விசாரணை செய்வதற்கு வெளிநாட்டு நீதிபதிகள், விசாரணை அதிகாரிகள் அடங்கிய நீதிமன்ற கட்டமைப்பொன்றை ஸ்தாபிப்பதற்கும், கடந்த காலங்கள் குறித்து ஆராய்வதற்கு மேலும் பல நிறுவனங்களை ஸ்தாபிப்பதற்கும், அனைத்து பொறிமுறைகளுக்கும் சர்வதேச தரப்பிடமிருந்து நிதியுதவி, தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக்கொள்ளும் சுதந்திரத்தை வழங்குவதற்கும் 2015ஆம் ஆண்டு அரசாங்கம் 30-1 யோசனையின் ஊடாக இணக்கம் தெரிவித்தது” என அவர் கூறுகின்றார்.

“உத்தேச நீதிமன்ற கட்டமைப்பின் முன்னிலைக்கு, ஆயுதம் ஏந்திய ராணுவ உறுப்பினர் ஒருவரை ஆஜர்படுத்துவதற்கு போதுமான சாட்சியங்கள் இல்லாத போதிலும், மனித உரிமை மீறல் அல்லது யுத்தக் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களின் கீழ் ராணுவ அதிகாரிகளை உள்ளக நிர்வாக செயற்பாடுகளின் ஊடாக சேவையிலிருந்து நீக்குவதற்கு ஜெனீவாவில் 2015ஆம் அரசாங்கம் இணக்கம் வெளியிட்டுள்ளது” என கோட்




டாபய ராஜபக்ஸ தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தேசிய நலனுக்கு முரணான வகையில் பல விடயங்கள் ஜெனீவா யோசனையில் உள்ளடங்கியிருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறான விடயங்களினால் 2015-2019 அரசாங்கம் தேசிய விரோத மற்றும் சிங்கள விரோத அரசாங்கம் என்ற விதத்தில் மக்கள் நோக்கினார்கள் என கோட்டாபய ராஜபக்ஸ தனது புத்தகத்தில் தெரிவித்துள்ளார்.

2015 - 2019ஆம் ஆண்டு முதல் ஆட்சியிலிருந்து அரசாங்கத்தை பாதுகாப்பதற்காக செயற்பட்ட வெளிநாட்டு சக்திகள், 2022ஆம் ஆண்டு தன்னை வெளியேற்றும் போராட்டத்தை செயற்படுத்தியதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

‘2018ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் அப்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு இடை




யில் விரிசல் ஏற்பட்ட போது, அந்த அரசாங்கத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக செயற்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகள், 2022ஆம் ஆண்டு தன்னை வெளியேற்றும் போராட்டத்தை முன்னெடுத்ததாக அவர் தனது புத்தகத்தின் ஊடாக குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பான்மை சிங்கள மக்கள் என்ற விதத்தில் தமது நாட்டிற்குள் காணப்படுகின்ற இடம் தமக்கு இல்லாது போயுள்ளது என்ற உணர்வினாலேயே 2019ஆம் ஆண்டு தனக்கு வாக்களிக்க மக்கள் ஒன்று திரண்டதாகவும் அவர் கூறுகின்றார்.

கோவிட் காலப் பகுதியில் பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொள்ள நேர்ந்ததாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

தனது புத்தகத்தில் இணைத் தலைப்பாக இந்த விடயத்தை அவர் தெளிவூட்டியுள்ளார்.

2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை சுற்றுலாத்துறை முழுமையாக பாதிக்கப்பட்டதுடன், 2020 முதல் 2021 செப்டம்பர் வரை குறைந்தளவான சுற்றுலா பயணிகளே வருகைத் தந்ததாகவும் அவர் கூறுகின்றார்.

2020ஆம் ஆண்டு முதல் 2022ம் ஆண்டுவரை மிகக்குறைந்த அந்நிய செலாவணியே நாட்டிற்கு கிடைத்துள்ளதுஎன அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால், வாகனம் உள்ளிட்ட இறக்குமதிகளை தடை செய்ய நேர்ந்ததாகவும், வெளிநாட்டிற்கு அனுப்பும் பணத்தை 5000 டாலர் வரை மட்டுப்படுத்த நேர்ந்ததாகவும், வெளிநாட்டு கடன் செலுத்துவதை நிறுத்த நேர்ந்ததாகவும் அவர் கூறுகின்றார்.

கோவிட் பெருந்தொற்று தனது ஆட்சி காலத்தில் பொருளாதார வீழ்ச்சிக்கு பாரிய தாக்கத்தை செலுத்தியது என அவர் குறிப்பிடுகின்றார்.

இதனால், வாழ்வாதாரம் ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கியமை, மாதாந்தம் 5000 ரூபா கொடுப்பனவு வழங்கியமை உள்ளிட்ட விடயங்களை அவர் இந்த புத்தகத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கோவிட் காலப் பகுதியில் நாட்டிற்கு ஏற்பட்ட பாதிப்புகளை விளக்கமாக கோட்டாபய ராஜபக்ஸ இந்த புத்தகத்தில் எழுதியுள்ளார்.

அத்துடன், கோவிட் பாதிப்புகளை தவிர்த்துக் கொள்வதற்காக உடனடி தடுப்பூசி திட்டத்தை செயற்படுத்தியதாக கோட்டாபய ராஜபக்ஸ தெரிவிக்கின்றார்.

கோவிட் தொற்று காணப்பட்ட காலப் பகுதியில்




நடாத்தப்பட்ட நாடாளுமன்றத் தேர்தலில், தமது கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தன்வசப்படுத்தியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**எரிபொருள் தட்டுப்பாடு, வரிசை மற்றும் வன்முறை**

கோவிட் தொற்று காரணமாக நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியினால், 2022 மார்ச் மாதம் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டதுடன், மின்தடையை ஏற்படுத்த வேண்டிய நிலைமையும் காணப்பட்டது என அவர் குறிப்பிடுகின்றார்.

2022 மார்ச் மாதம் 28ஆம் தேதி 7 மணி நேர மின்வெட்டு அமல்படுத்தப்பட்டதுடன், மார்ச் 31ஆம் தேதி அந்த மின்வெட்டு நேரம் 12 மணிநேரம் வரை அதிகரிக்கப்பட்டது.

இதையடுத்து, 2022 மார்ச் 31ஆம் தேதி தனது மிரிஹான வீட்டு வளாகம் யுத்த களமாக மாறியது என கோட்டாபய ராஜபக்ஸ கூறுகின்றார்.

முதலில் சிறு குழுவினரால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், ஒரு தொலைக்காட்சி மற்றும் சமூகவலைத்தளங்களில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டதை அடுத்து, அது பாரிய போராட்டமாக மாற்றம் பெற்றது என அவர் குறிப்பிடுகின்றார்.

போராட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக வருகை தந்த பாதுகாப்பு பிரிவினர் மீது போராட்டக்காரர்கள் தாக்குதல் நடாத்தியதை அடுத்து, போராட்டத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக கண்ணீர் புகை மற்றும் நீர் தாரை பிரயோகத்தை பாதுகாப்பு பிரிவினர் நடாத்தியதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த போராட்டத்தின் போது கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்வதற்காக பெருமளவான வழக்கறிஞர்கள் முன்னிலையானதாக கூறிய அவர், தான் பதவியிலிருந்து விலகும் வரை அந்த செயற்பாடு தொடர்ந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதையடுத்து, 2022 ஏப்ரல் 09ஆம் தேதி காலி முகத்திடல் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதாக அவர் கூறுகின்றார்.

**காலி முகத்திடல் போராட்டத்தில் சிறுபான்மையினர்**

“விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு எதிரான யுத்தத்தை நாம் வென்ற தருணத்திலிருந்து, நான் தமிழ் மக்களின்

(16ம் பக்கம் பார்க்க)

# ராஜபக்‌ஷவை விரட்டியடித்தது யார்?...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

எதிரியாக சித்தரிக்கப்பட்டேன். ஒன்றிணைந்த நாட்டிற்கு பதிலாக ஐக்கிய இலங்கையை கோரி நின்ற புலம்பெயர் தமிழர்களின் நிகழ்ச்சி நிரல் இந்த போராட்டத்தில் தெளிவாகியது.

சமஷ்டி அரசாங்கமொன்றை தமிழ் கட்சிகள் நீண்டகாலமாக கோரியதுடன், காலி முகத்திடல் போராட்டத்தின் போது ஜனாதிபதி செயலகத்தின் மீது மின்விளக்குகளின் ஊடாக அந்த கோரிக்கை காட்சிப்படுத்தப்பட்டது." என அவர் குறிப்பிடுகின்றார்.

"2012ஆம் ஆண்டு பொதுபல சேனா அமைப்பு உருவானதுடன், அந்த அமைப்புடன் எனக்கு தொடர்புள்ளது என்ற அடிப்படையில், நான் முஸ்லிம்களின் எதிரி என்ற கருத்து வெளியானது. கோவிட் மரணங்களை அடக்கம் செய்யும் விவகாரத்தில் கூட முஸ்லிம்களுக்கு எதிரானவன் என கருத்தை காணக்கூடியதாக இருந்தது."

"2019ஆம் ஆண்டு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் வாக்குகள், எனது எதிர் போட்டியாளருக்கு கிடைத்த நிலையிலேயே நான் அதிகாரத்தை கைப்பற்றினேன். பௌத்த மக்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் இடமான ருவன்வெலிசேய புனித பூமியிலேயே நான் பதவி பிரமாணம் செய்துக்கொண்டேன். சிங்கள பெரும்பான்மை வாக்குகளினால் நான் தெரிவு செய்யப்பட்டமை குறித்து நான் பதவி பிரமாணம் செய்துக்கொண்டதன் பின்னர் பல்வேறு அர்த்தங்கள் வெளிப்படும் வகையில் கருத்துகள் முன்வைக்கப்பட்டன." என அவர் குறிப்பிடுகின்றார்.

தனது அமைச்சரவையில் அறுமுகன் தொண்டமான், டக்ளஸ் தேவானந்தா ஆகிய தமிழர்கள் இருந்த போதிலும், முஸ்லிம்கள் எவரும் இருக்கவில்லை. ஆறுமுகன் தொண்டமான் உயிரிழந்ததன் பின்னர் அவரது மகன் தெரிவு செய்யப்பட்டபோதிலும், அவருக்கு வயது குறைவு காரணமாக அமைச்சர் பதவி வழங்கவில்லை. தேசிய பட்டியல் ஊடாக அலி சப்ரியை தெரிவு செய்து, அவருக்கு அமைச்சர் பொறுப்பை வழங்கினேன்." என அவர் கூறுகின்றார்.

"போராட்டத்திற்குள்"சிங்கள பௌத்த தரப்பில் குறுகிய அளவினரே பங்குப்பற்றினர். சில பௌத்த மத குருமார்களே பங்குப்பற்றினார்கள். போராட்டத்திற்கு ஒரு மூத்த பௌத்த பிக்கு மாத்திரமே ஆதரவு வழங்கினர். ஓமல்பே சோபித்த தேரர் மாத்திரமே ஆதரவு வழங்கினார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ வசமிருந்த சிங்கள பௌத்த அதிகாரம் இல்லாது போனது என



சோபித்த தேரர் ஹிரு தொலைக்காட்சிக்கு தெரிவித்தார். ஜனாதிபதி பதவிக்கு தெரிவாகி பெற்றுக்கொண்ட சிங்கள பௌத்த வாக்குகளை போராட்டத்தின் ஊடாக இல்லாது செய்து நோக்கம் என்பது அவரது கருத்திலிருந்து விளங்கிக்கொள்ள முடிகின்றது" என அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த போராட்டமானது சிங்கள எதிர்ப்பு மற்றும் பௌத்த எதிர்ப்பு போராட்டம் என்பதுடன், அது வெளிநாட்டு தரப்பினரின் தூண்டுதல் மற்றும் அனுசரணை என கோட்டாபய ராஜபக்ஸ கூறுகின்றார்.

கோவிட் தொற்று காரணமாக ஏற்படும் மரணங்களை அடக்கம் செய்ய கூடாது என சுகாதார தரப்பினர் வழங்கிய ஆலோசனைகளுக்கு அமைய, தான் நடவடிக்கை எடுத்த போதிலும், அதனை முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கையாக சிலர் சித்தரித்ததாக கோட்டாபய ராஜபக்ஸ தெரிவித்தார்.

இந்த முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கையானது, பின்னரான காலத்தில் தனக்கு எதிரான வைராக்கியமாக மாற்றம் பெற்றதை அடுத்து, தன்னை பதவியிலிருந்து விரட்டியடிக்கும் திட்டத்திற்கு அதனை பயன்படுத்திக் கொண்டதாகவும் அவர் கூறுகின்றார்.

"கோவிட் மரணங்களை அடக்கம் செய்வதற்கு மாலத்தீவு அரசாங்கத்திடம் தான் உதவி கோரிய நிலையில், அதற்கு மாலத்தீவு அரசாங்கம் இணக்கம் தெரிவித்தது. எனினும், இனவாத இலங்கை அரசாங்கத்திற்கு இக்கட்டான சூழ்நிலையிலிருந்து விடுபடுவதற்கு ஏன் உதவி செய்கின்றீர்கள் என இலங்கைக்கான ஐரோப்பிய தூதுவர் ஒருவர் மாலத்தீவு அரசாங்கத்திடம் கோரினார். ஜெனீவா மனித உரிமை பேரவை உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் அரசாங்கத்தை நிர்க்கதி நிலைக்கு தள்ள சர்வதேச வல்லரசு நாடுகள் இந்த பிரச்னையை பயன்படுத்திக் கொண்டன" என அவர் குறிப்பிடுகின்றார்.

அதனைத் தொடர்ந்து சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளின் அடிப்படையில் 30 அடி ஆழத்தில் நிலத்தடி நீர் இல்லாத பகுதிகளில் கோவிட் சடலங்களை புதைக்க அனுமதி வழங்கப்பட்டது என அவர் தெரிவிக்கின்றார்.

எனினும், இந்த விடயத்தை முன்னிலைப்படுத்தி, முஸ்லிம்களை தனக்கு எதிராக திசை திருப்பியதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

### ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

"என்னை பதவியிலிருந்து விரட்டியடிக்கும் விவகாரத்தில் கார்தினல் உள்ளிட்ட கத்தோலிக்க தேவாலயத்தின் சிலர் தரப்பினர் பாரிய பொறுப்புக்களை நிறைவேற்றினார்கள். காலி முகத்திடல் போராட்டத்தில் கத்தோலிக்க சமூகத்தையே அதிகளவில் காணக்கூடியதாக இருந்தது. தன்னை வெளியேற்றும் நடவடிக்கைகளின் கத்தோலிக்க சமூகத்தினர் மறைமுகமாகயின்றி நேரடியாகவே களமிறங்கினார்கள்." என அவர் கூறுகின்றார்.

"ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் இரகசிய சாட்சியங்கள் காணப்பட்டமையினால், அதனை வெளிப்படுத்த வேண்டாம் என பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அதனால், கார்தினல் உள்ளிட்ட எவருக்கும் அதனை கையளிக்க முடியவில்லை. எனினும், 2021 பிப்ரவரி 25ஆம் தேதி ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை அனைத்து சாட்சியங்களுடனும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த பிரதிகள் பௌத்த மகாநாயக்க தேரர்கள் மற்றும் கார்தினல் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. எனினும், இந்த தாக்குதலுடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளியை சட்டத்தின் முன் நிறுத்துமாறு கார்தினல் கோரிக்கை விடுத்தார். எனினும், அந்த அறிக்கை குறித்து கார்தினல் திருப்தி கொள்ளவில்லை" என அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டே கத்தோலிக்க சபை தனக்கு எதிராக போராடியது என கோட்டாய ராஜபக்ஸ தனது புத்தகத்தின் தெளிவூட்டியுள்ளார்.

தன்னை ஆட்சியிலிருந்து வெளியேற்ற பல நாடுகள் தொடர்புபட்டுள்ளது என குறிப்பிட்டுள்ள போதிலும், அந்த நாடுகளின் பெயர்களை தெளிவாக உறுதிப்படுத்த இந்த புத்தகத்தில் கோட்டாபய ராஜபக்ஸ கூறவில்லை. ●

